நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 02 (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:116

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்லு நோக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் முக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

நெல்லியடி வான் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழப்பு!

(நெல்லியடி)

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் சிக்கி யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

கரணவாயைச் சேர்ந்த மகாலிங்கம் சாந்தி (வயது28) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

பஸ் ஒன்றிலிருந்து நெல்லியடிச் சந்தியில் இறங்கி, வீதியைக் கடக்க முற்பட்ட இவரை தனியாருக்குச் சொந்தமான வான் ஒன்று மோதியதில் படுகாயமடைந்தார்.

அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்கள் இவரை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தினர். அங்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

சோமவன்ச அளித்த பேட்டியை உறுதிப்படுத்துகிறது ஏசியன் ரிபியூன்!

(வொஷிங்ரன்)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஏசியன் ரிபியூன் சஞ்சிகைக்கு வழங்கியதாகக் கூறப்படும் செவ்வி தொடர்பில் அந்தச் சஞ்சிகை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஏசியன் ரிபியூன் சஞ்சிகையின் செய்தியாளரும் அமெரிக்காவில் வசிப்பவருமான வோல்ரர் ஜெயவர்த்தன என்பவர், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் செவ்வியைப் பிரசுரித்திருந்தார். எனினும் இந்தச் செய்தி பிழையானதெனவும் அவ்வாறான ஒரு செய்தியை தமது தலைவர் சோமவன்ச அமரசிங்க வழங்க வில்லை எனவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்திருக்கும் ஏசியன் ரிபியூன் சஞ்சிகை, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை கைசாத்திடும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக லண்டனிலிருந்து இலங்கை திரும்புவதற்கு 6 மணித்தியாலங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து சோமவன்ச அமரசிங்கவுடன் ஏசியன் ரிபியூன் செய்தியாளர் வோல்ரர் ஜெயவர்த்தன மின்னஞ்சலில் தொடர்புகொண்டபோது அவர் செவ்வியக்க சம்மதித்தாக வால்ரர் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அந்தச் செவ்வியில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப்பரவலாக்கல் யோசனையை அங்கீகரிக்கப்போவதில்லை என சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மினிபஸ் - சைக்கிள் விபத்து இளவாலையில் மாணவன் பலி!

(இளவாலை)

இளவாலைச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மாணவர்களில் ஒருவன் உயிரிழந்ததுடன், மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை ஆறு மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

சென்.ஹென்றீஸ் கல்லூரியில் நடை பெறவிருந்த இசை நிகழ்ச்சிக்குரிய அனுமதிச் சீட்டைப் பெறுவதற்காக பாடசாலை நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மீது இளவாலையில் இருந்து தொட்டிலடி நோக்கி வந்துகொண்டிருந்த மினி பஸ் மோதி வேகக்கட்டுப்பாட்டை இழந்து பின்னர் மின் கம்பத்துடன் மோதியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் திருப்தியாக செயற்படவில்லை!

யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் மேற்கொண்டுவரும் நடவடிக்கை போதியதாக இல்லை. இதனை முறியடிக்க மக்கள் முன்வர வேண்டும் என யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாடு எப்போது ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததோ, அன்றிலிருந்து இன்றுவரை அது கொலைக் களமாக மாறியுள்ளது. யாழ்ப்பாண மக்களின் அமைதி, சுதந்திரம் அடியோடு பிடுங்கப்பட்டுவிட்டது. அப்பாவிக் குடிமகனின் உயிர் - இனந்தெரியாதோரால் பறிக்கப்படுவது தொடர் கதையாகி விட்டது.

கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி கனகம்புளியடிப் பகுதியில் வசித்துவந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இக்கொலைகள் தொடர்பாக யாரும் கைதுசெய்யப்படவில்லை. அதேபோல் ஏற்கனவே நடந்த கொலைகளின் குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

தொடர்ந்து பேச்சு நடத்த மனோ - மலிக் இணக்கம்!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு மற்றும் சமாதான நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்தும் பேச்சு நடத்த ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பிரதிநிதிகள் அடங்கிய மனோ - மலிக் குழு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எம். கருணாரத்ன மற்றும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஜே.வி.பியுடன் இரகசிய உடன்பாடா? நிராகரிக்கின்றது சுதந்திரக்கட்சி!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பல இரகசியமான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும், அந்த இரகசியங்கள் மக்கள் முன் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் கருத்து கேலிக்குரியதென்று கூறி சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிராகித்துள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேலும் தெரிவித்திருப்பதாவது -

இந்த உடன்பாட்டில் எந்த இரகசியமும் கிடையாது. அது மக்கள் முன்பாகவே செய்து கொள்ளப்பட்டது.

மூன்று மொழிகளில் வெளியிடப்பட்ட இந்த உடன்பாடு - ஊடகங்கள், இராஜதந்திரிகள், நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மற்றும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதில் எந்த இரகசியங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

புதிதாக அமைக்கப்பட்ட கூட்டணியை விரைவில் ஒரு அரசியற்கட்சியாகப் பதிவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் திருமலை மாணவன் முதலிடத்தில்!

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் தமிழ்மொழிப் பிரிவில் அதிக புள்ளிகள் பெற்ற முதல் ஐந்து மாணவர்களினதும் பெயர் விபரங்கள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலய மாணவனான என். அபிலாஷ் 182 புள்ளிகளை பெற்று அகில இலங்கை ரீதியில் முதல் இடத்திலும் திருகோணமலை விவேகானந்தா வித்தியாலயத்தின் வி.அனோபியன் 180 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்திலும், கொழும்பு இராமநாதன் இந்து கல்லூரியின் வி.சர்வேஸ்வரன் 177 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்திலும், பட்டிருப்பு மத்திய கல்லூரி மாணவி பி.பவதாரணி 174 புள்ளிகளை பெற்று நான்காம் இடத்திலும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் நிலை குறித்து மிலிந்த இந்திய அதிகாரிகளுடன் பேச்சு!

(புதுடெல்கி)

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட பேச்சு நடத்தினார்.

இலங்கை - இந்திய உறவுகள் குறித்தும், பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்த மிலிந்த மொறகொட தலைமையிலான குழு நேற்று முன்தினம் இந்தியாவுக்கு சென்றது.

நேற்றுக் காலை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த சிங்கவுடன் மிலிந்த மொறகொட பேச்சு நடத்தினார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்திய அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாக அமைச்சு தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை மீனவர்கள் நால்வருக்கும் ஆறாம் திகதி வரை விளக்க மறியல் உத்தரவு!

(மல்லாகம்)

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறை மீனவர்கள் நான்கு பேரையும் அடுத்த மாதம் ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த த.புவனேஸ்வரன், த.ஸ்ரீதரன், பு.சந்திரமோகன், கே.கரிதாஸ் ஆகிய நான்கு பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடலில் காணமற்போனவரைத் தேடிச் சென்ற வேளையே இவர்கள் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் காங்கேசன் துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...
(சி-2009)
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com.

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெயம்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)

நிறைஞ்சனலி சங்கானை
அர்ஜின், சிம்ரன்
நடித்த
சுமுமனை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Can You do a lot of
(சி-2004)

விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப் போட்டிக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளது.

உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, எல்லே, துடுப்பாட்டம் ஆகிய போட்டிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் கழக அணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பாக ஒப்படைக்கும்படி விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.ரமணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறை விளையாட்டுப் போட்டிகளில் மகளிருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியும் இடம்பெற இருப்பதால், ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர்
சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

YOGI BEAUTY PARLOUR
(Academy of Beauty Culture & Hair Dressing)
HOMESCIENCE ACADEMY
குறுகியகால புதிய பயிற்சி வகுப்புக்கள்
30.01.2004 முதல் ஆரம்பமாக உள்ளது.
(1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் Beauty Culture and Therapy)
(2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்.
(3) இலகு வழித்தையல், கேக் ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரமும் மாச்சீனி மலர் அலங்காரமும் (Fondant Structures and Suger Flowers) கிறிஸ்டல் அழகு பொருட்கள் தயாரித்தல், துணியில் வர்ண அலங்கரிப்பு, செயற்கை மலர் அலங்காரங்கள் (Flower Making and Bouquet Making)
இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்பும் மானவிகள் உடன் தொடர்புகொள்ளவும்.
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(603) (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) T.P: 2222796

விற்பனைக்கு
உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TELESONIC, RIKON, PACIFIC, USHA AND SUNDA வகையில் Fans, Toasters, Irons, Gas Cookers, Washing Machines, Food Jars, Blenders, Clocks, Rice Cookers, Televisions, Ceiling Fans, Mega Vacuum Flasks இன்னும் பலதரப்பட்ட உபகரணங்களும் உண்டு.
IZZY ENTERPRISES
164/1, Prince Street, colombo-11
T.P: 2437843 (C/2023) Fax: 075354304

மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடி பொருட்களினால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் நோக்குடன்
யுனிசெப் அனுசரணையுடன்
வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்ப நிறுவனம்
தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு
கோட்டரீதியாக யாழ்.மாவட்டத்தில்
முன்னெடுக்கும்
பிரசுர போட்டி
கட்டுரை, சித்திரப் போட்டிகள்
தலைப்பு :- மிதிவெடி, வெடிக்காத வெடிபொருட்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ளல்.
இடம் :- யாழ்.மாவட்டத்தில் வலயரீதியாக 10 நிலையங்களில் போட்டிகள்நடைபெறும்.
காலம் :- போட்டிகளுக்கான கால நேரங்களும் நிலையங்களின் விபரங்களும் பின்னர் பிரசுரிக்கப்படும்.
பரிசில்கள் வழங்குதல் வைபவரீதியாக நடைபெறும். போட்டிகள் யாவும் கல்விவலய, கல்விக்கோட்ட அதிகாரிகளினதும் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஆலோசனையுடனும் பங்களிப்புடனும் முன்னெடுக்கப்படும்.
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,
இல. 63 பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(சி-2170) தொலைபேசி இல. 222 - 5932

O/L... இன் அடுத்து?
ENGLISH COURSE
கிளாஸ்போகாமலே ENGLISH கற்க முடியும்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்.
அழகிய கைக்கடிகாரம் மற்றும் அழகிய கிளியர் பேக் பைல் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்
பாடநெறிக் கட்டணம் இல்லை. பதிவுக் கட்டணமும் உடன் செலுத்த வேண்டாம்.
விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 2.00 பெறுமதியான 5 முத்திரைகள் அனுப்பிப் பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O.BOX 143, KANDY, SRI LANKA. (601)

ஈர விழிகளுடன்
ஈராண்டு நிறைவில்...

திருமதி மேரி இராசமணி மரியாம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை, கரவெட்டி அல்லாரை அ.த.க.பாடசாலை, கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலை, கரவெட்டி மேற்கு றோ.க., கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி)

தோற்றம்	மறைவு
29.05.1922	25.01.2002

அம்மா!
ஈராண்டுகளானாலும் - எம்
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
ஈகைக்கு அரசியே! எமை
ஈன்றெடுத்த ஆருயிரே!
ஈசனுக்கு உகந்தவளே!
ஈராண்டென்ன?
ஈராயிரம் ஆண்டானாலும்
உம் நினைவு அழியாது
இறைபதமே பள்ளி கொள்வாய்

நினைவுத் திருப்பலி : 26.01.2004 திங்கள்
நேரம் : காலை 11 மணி
இடம் : கல்வாரிப் பூங்கா, வவுனிக்குளம்

பிள்ளைகள்
ஜெகசோதி வரதராசா (கனடா)
ஞானசோதி புஸ்பராசா (நீர்கொழும்பு)
அருட்திரு கருணாரத்தினம் (நாவாந்துறை)
இரத்தினசோதி
அரியரத்தினம் (ஜேர்மனி)
ஜீவரத்தினம் (ஜேர்மனி)
அருட்திரு ஞானரத்தினம் (பண்டத்தரிப்பு)
உதயசோதி ஜேம்ஸ் (ஜேர்மனி) (600)

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் புதிய கூட்டணி அக்கறையில்லை!

முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி.கூட்டு முன்னணி போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இக்கூட்டு முன்னணியின் உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் முன்னணியினால் உருப்படியாக எதனையும் சாதிக்கமுடியாது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் மேலும் கூறின.

இது குறித்து, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி, இலங்கையின் வடக்கு - கிழக்குச் சார்ந்த பிரச்சினைகளை புறக்கணித்துவிட்டு தென்னிலங்கை அரசியலிலேலேயே புதிய கூட்டு முன்னணி கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகத் தொடர்ந்து இருந்து வருவதாகக் குறிப்பிட்ட ஹசன் அலி, தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றும் தெரிவித்தார்.

சமாதானத்துக்கான மக்களாணையைப் பெற்றுள்ள சிறிலங்கா ஜனாதிபதியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஹசன் அலி வேண்டுகோள் விடுத்தார்.

ஜப்பான் நாட்டின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

மேல்மாகாணம், மலையகத்தில் பிரபாகரன்கள் தோன்றலாம்!

ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சிறந்த எண்ணங்களைக் கொண்ட இளைஞர் சமூகம் ஒன்று உருவாகாவிட்டால், நாட்டின் எதிர்காலம் நிச்சயமற்றதாகிவிடும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கள் துறையில் இடம் பெற்ற பாடசாலை நிகழ்வொனறில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்- மலையகப் பகுதிகளிலும், மேல் மாகாணங்களை அண்டிய பகுதிகளிலும் பிரபாகரன் போன்றவர்கள் உருவாகும் சமூகக் கட்டமைப்புக்கள் உருவாகும் நிலை தற்போது நிலவுகின்றது.

அத்துடன், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறைவடைந்துள்ளது.

எமது நாட்டில் வளர்ந்துவரும் இளைய சமுதாயம் ஒன்றை தேவையான எண்ணங்களுடன் நாம் உருவாக்காவிட்டால், எமது நாடு முன்னேறாது. எனவே, நாட்டை நிர்வகிக்க திறமைவாய்ந்த அறிவுள்ள பொது மக்களிடம் கொள்ளையடிக்காத தலைவர்களை நாம் உருவாக்கவேண்டும். அத்துடன், சரியான வியூகம் ஒன்றை அமைத்து, நாட்டை சரியான முறையில் கட்டியெழுப்பவேண்டும்.

மறுபுறத்தே, இந்த வியூகங்களைச் செயற்படுத்த புதிய இளைய சமுதாயம் ஒன்றை நாம் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு செய்யாவிட்டால், ஆண்டவனே மேலிருந்து வந்தால்கூட எமது நாட்டை திருத்த முடியாது. இந்த நிலை தொடர்ந்தால் பிரபாகரனுக்குப் பதிலாக சிங்களப் பிரபாகரன்கள் உருவாகுவார்கள்.

இதேநிலையே, தோட்டப்பகுதிகளிலும் ஏற்படும். கிழக்கு மாகாணத்தில் இன்று முஸ்லிம் பிரபாகரன்கள் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொலை, கொள்ளை சம்பவங்களின்போது பொலிஸாரின் ஆயுதங்கள் பாவிக்கப்படுகிறது

பொலிஸ்மா அதிபர் குற்றஞ்சாட்டுகிறார்

(கொழும்பு)

கொலை, கொள்ளை சம்பவங்களின் போது, பொலிஸாரின் ஆயுதங்கள் சிலவும் பாவிக்கப்படுவதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

தொம்பே என்ற இடத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளைச் சம்பவத்தின்போது, பொலிஸார் பயன்படுத்தக்கூடிய ஆயுதம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான ஆயுதங்கள் பொலிஸாரிடம் இருந்து பறிபோனவையாக இல்லை. அவை பொலிஸார் பாவிக்கும், அதேவேளையில் கொள்ளை, கொலை சம்பவங்களில் ஈடுபடுபவர்களும் பாவித்துள்ளார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து சம்பந்தப்பட்ட கொள்ளைக் கோஷ்டிக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கலாமா என்றே தற்போது சந்தேகிக்கப்படுகின்றது.

பொலிஸ் நிலையங்களில் உள்ள ஆயுதக் களஞ்சியங்களில் உள்ள ஆயுதங்களை அவை அங்கே இருக்கின்றனவா என்பதை அறிய உயரதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் எட்டாம் திகதிவரை சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்குரிய கால எல்லையாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அதனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவேண்டும் இல்லையேல், பொலிஸார் பரிசோதனை நடத்தி கைப்பற்றப்பட்டால் அதற்கு தண்டனை வழங்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (01)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி

ஜே. வி. பி. யுடன் இரகசிய உடன்பாடு; வெளிப்படுத்தக் கோருகிறார் ரணில்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் சில இரகசியங்கள் இருப்பதாகவும் அவை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

அரசாங்க கட்சி உறுப்பினர்களிடையே நாடாளுமன்றத்தில் கலந்துரையாடல் நடத்தியபோதே, இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக அநுராபண்டாரநாயக்க கருத்து தெரிவிக்கும்போது, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் எந்தவிதமான இரகசியங்களும் இல்லை. ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் யாவும், மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி நாட்டின் முன்றாவது சக்தி என்ற அடிப்படையில் அவர்களுடன் உடன்பாடு செய்துகொள்ளப் பட்டது என்று அநுரா பண்டாரநாயக்க கருத்துத் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் இன்னமும் ஜனநாயக வழிக்குத் திரும்பாத ஒரு அமைப்புடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டிருக்கிறார். இந்த ஒப்பந்தம் தொடர்பான இரகசியங்களை அவர்தான் முதலில் வெளிப்படுத்தவேண்டும்.

இதேவேளை, ஜனநாயகத்திற்கு திரும்பியுள்ள ஒரு கட்சியின் கொள்கைகளை மதித்தே நாம் ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொண்டிருப்பதாகவும் அநுரா பண்டார நாயக்க மேலும் தெரிவித்தார். (01)

தம்மிகவின் அரசியற் கொலை; புலனாய்வு அதிகாரிகளும் தொடர்பு

பாதாள உலகத் தலைவர் தம்மிக அமரசிங்கவின் கொலை தொடர்பில், குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருப்பதாக தம்மிக அமரசிங்கவின் தாயார் நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சாட்சியமளித்ததாக தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரி ஞானரட்ன என்பவர் தம்மிக அமரசிங்கவை கொலை செய்யப் போவதாக பலமுறை எச்சரித்ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன், தம்மிக அமரசிங்கவின் கொலைக்கு ரெலிக்கொம் நிறுவன தலைவர் திலங்க சுமதிபால சம்பந்தப்பட்டிருப்பதாக சில குற்றப்புலனாய்வு பிரிவினர் தம்மிடம் கூறியதாகவும் தம்மிகவின் தாயார் தெரிவித்தார். (01)

பிரதேசசபைத் தலைவரை 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு!

ஐக்கிய தேசியக் கட்சியினைச் சேர்ந்த கதிர்காமம் பிரதேச சபையின் தலைவரை எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திஸ்ஸ மகராம நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று இந்த உத்தரவு நீதிவானால் பிறப்பிக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களைத் தாக்குவதற்கு முயற்சித்தார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இது தொடர்பான விசாரணைகளை நடத்தச் சென்ற பொலிஸார் மீது பிரதேச சபைத் தலைவரும் அவரின் ஆதரவாளர்களும் தடைகளை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தொடர்ந்து தனக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாகக் கூறி பிரதேச சபைத் தலைவர் திஸ்ஸ மகராம வைத்தியசாலையில் அனுமதி பெற்றுள்ளார்.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் பொலிஸார் நீதிமன்றுக்கு கொண்டுவந்ததை அடுத்தே, நீதிவான் குறிப்பிட்ட பிரதேசத் தலைவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

வைத்திய பரிசோதனையில் இவருக்கு உயர் இரத்த அழுத்தம் இல்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில், நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பிரதேச சபைத் தலைவருக்கு விளக்க மறியலுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (01)

விஜய குமாரதுங்க கொலை தொடர்பாக

சோமவன்சவை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்

சந்திரிகாவுக்கு அமைச்சர் ராஜித கடிதம்

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்கவின் கொலை தொடர்பான விபரங்கள் முழுமையாக தெரியும் என்ற காரணத்தால், அவரை உடனடியாக கைதுசெய்யவேண்டும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கேட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே, அமைச்சர் இவ்வாறு கேட்டுள்ளார்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை தன் வசம் வைத்திருப்பதனால் சோமவன்சவைக் கைதுசெய்யும் நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி அமைச்சர் கோரியுள்ளார்.

இதுவரை காலமும் குமாரதுங்கவைக் கொலைசெய்தவர்கள் யார் என்ற தகவல்கள் வெளியாகவில்லை. தற்போதும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சோமவன்சவை கைது செய்து விசாரணை நடத்துவதன் மூலம் பல தகவல்கள் வெளியாகும் என ஜனாதிபதியை ராஜித சேனாரத்தின கேட்டுள்ளார். (01)

மனோ - மலிக் குழுவினர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையைத் தவிர்க்கும் வகையில் உருவாக்கப்பட்ட மனோதித்தவெல - மலிக் சமரவிக்கிரம குழு நேற்று முன்தினம் மீண்டும் சந்தித்து பேச்சுநடத்தியது.

இதன்போது, கடந்த மாதம் விடப்பட்ட இடத்தில் இருந்து சமாதான நகர்வு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

நேற்றுமுன்தினம் இந்தக் குழுவினருக்கிடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட அறிக்கை நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கையளிக்கப்படவுள்ளது.(01)

புலமைப்பரிசில் உதவித்தொகை ரூபா 500 ஆக அதிகரிக்கப்படும்!

கல்வி அமைச்சு ஆராய்கிறது

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்காக வழங்கப்படும் உதவித்தொகையை அதிகரிப்பது தொடர்பாக, கல்வி அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

தற்போது புலமைப்பரிசில் தொகையாக மாதாந்தம் 240 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகையை 500 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், தற்போது வழங்கப்பட்டுவரும் 240 ரூபா உதவித்தொகை போதாமல் இருப்பதாக பெருமளவிலான முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ளதை அடுத்து, இது தொடர்பாக ஆராயப்பட்டுவருகிறது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 10 ஆயிரம் மாணவர்கள் சித்திபெற்றுள்ளதாகவும், இவர்கள் இந்த உதவித்தொகையைப்பெறுவதற்கு தகுதிபெற்றுள்ளதாகவும். இவர்களில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களை கிராம அலுவலர்களின் சிபார்சுடன் பிரதேச செயலர்கள் தெரிவுசெய்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வி.பி கிண்ண முத்தரப்பு போட்டியில்

மூன்று ஓட்டங்களால் இந்திய அணி சிம்பாப்வேயைத் தோற்கடித்தது!

(அடிலெய்ட்)

அவுஸ்ரேலிய, இந்திய, சிம்பாப்வே அணிகளுக்கிடையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி கிண்ணத்துக்கான முத்தரப்பு சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில், நேற்று அடிலெய்டில் இந்திய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி மூன்று ஓட்டங்களால் சிம்பாப்வே அணியை வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் கங்கூலி - தனது அணி துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். நேற்றைய போட்டியில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட சச்சின், ஷேவாக் ஆகியோர் விளையாடவில்லை. வழமைக்கு மாறாக இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக பார்த்தீவ் பட்டேல், சஞ்சய் பங்கர் இருவரும் களமிறங்கினர்.

முதலாவது ஓவரில் ஓட்டமெதுவும் பெறாமல் சஞ்சய் பங்கரும், இரண்டாவது ஓவரில் ஓட்டமெதுவும் பெறாமல் பட்டேலும், நான்காவது ஓவரில் ஒரு ஓட்டத்துடன் கங்கூலியும் ஆட்டமிழந்தனர். இதன்போது இந்திய அணி நான்கு ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களை இழந்து மிகவும் நெருக்கடியைச் சந்தித்தது.

அதன்பின் நான்காவது விக்கெட் இணைப்பாட்டமாக லக்ஷ்மனுடன் டிராவிட் இணைந்துகொண்டார். இருவரும் மிக நிதானமாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். 56 ஓட்டங்களைப் பெற்றநிலையில் டிராவிட் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ரொஹான் கவாஸ்கர் சிறப்பாக விளையாடி தனது முதலாவது அரைச்சதத்தை பெற்றார். இவரும் 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து பதானி 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் மிகச்சிறப்பாக விளையாடி 131 ஓட்டங்களைப் பெற்றநிலையில் லக்ஷ்மன் ஆட்டமிழந்தார். இந்தப் போட்டித்தொடரில் இவர் பெற்ற 3 ஆவது சதம் இதுவாகும்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சாளர்களில் ஹீத் ஸ்ரீக் 3 விக்கெட்டுக்களையும், ஹொண்டோ 2 விக்கெட்டுக்களையும், பிறைஸ், பிளிங்நட் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

281 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் ஆடத் தொடங்கிய சிம்பாப்வே அணி - முதல் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்காக கார்லைஸுடன் இணைந்தவர் எர்வின். இருவரும் மிகச்சிறப்பாகவும், ஆக்ரோஷமாகவும் விளையாடி சிம்பாப்வே அணியை வெற்றி இலக்கை நோக்கி இட்டுச்சென்றனர். இந்த நேரத்தில் எர்வின் 100 ஓட்டங்களை எடுத்தநிலையில் ரன் அவுட்டானார். கார்லைஸ் 109 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இறுதிப் பந்தில் 6 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் இப்ராஹிமால் இரண்டு ஓட்டங்களையே பெறமுடிந்தது. 50 ஓவர்கள் நிறைவில் சிம்பாப்வே 6 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களையே எடுத்து 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அகர்கர் 3 விக்கெட்டுக்களையும், பாலாஜி, பங்கர் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தத் தொடருக்கான அடுத்த போட்டி அவுஸ்ரேலிய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நாளை நடைபெறும்.

விளையாட்டு

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கான தடகளப் போட்டிகள் இன்று ஆரம்பம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் - இன்றும் நாளையும் இடம்பெற்று இறுதி நாள் நிகழ்வு இம்மாதம் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இன்றுகாலை 7 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் 5000 மீற்றர் ஆண், பெண் (இறுதி), 100 மீற்றர், 200 மீற்றர் - ஆண், பெண் (தெரிவு), குண்டெறிதல் - ஆண் (இறுதி), நீளம்பாய்தல் - ஆண் (இறுதி), ஈட்டியெறிதல்- ஆண், பெண் (இறுதி), முப்பாய்ச்சல் - ஆண், பெண் (இறுதி), உயரம் பாய்தல் - ஆண் (இறுதி), தட்டெறிதல் - பெண் (இறுதி), 800 மீற்றர் - ஆண், பெண் (இறுதி), 4x400 மீற்றர் - ஆண், பெண் (இறுதி) ஆகிய நிகழ்வுகளும் -

நாளைகாலை 7 மணி தொடக்கம் 10,000 மீற்றர் - ஆண், பெண் (இறுதி), 1500 மீற்றர் - ஆண், பெண் (இறுதி), 400 மீற்றர் - ஆண், பெண் தெரிவு, உயரம் பாய்தல் - பெண் (இறுதி), தட்டெறிதல் - ஆண் (இறுதி), நீளம் பாய்தல் - பெண் (இறுதி), குண்டெறிதல் - ஆண் (இறுதி) ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

குறிப்பிட்ட நேரத்தில் சகல போட்டியாளர்களும் போட்டி நடைபெறும் இடத்துக்கு வருகைதந்து, போட்டிகள் ஒழுங்காக நடைபெற ஒத்துழைக்குமாறு சகல கழக நிர்வாகத்தினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)

தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவுகள் ஒருநாள் போட்டிகள் இன்று ஆரம்பம்

(கேப்டவுன்)

லாரா தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான டெஸ்ட் தொடரை, தென்னாபிரிக்கா 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. தென்னாபிரிக்க - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. இரு அணிகளுக்குமிடையிலான முதல் போட்டி - இன்று கேப்டவுனில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடரை இழந்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஒருநாள் தொடரைக் கைப்பற்றவேண்டிய நிலை உள்ளது. தென்னாபிரிக்காவின் சகலதுறை ஆட்டக்காரரான குளுஸ்னர் 10 மாத இடைவெளியின் பின் அணிக்கு திரும்பியுள்ளார். இந்த வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிலை உள்ளது. பகல் - இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் இன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

தமிழக அரசு மனு தள்ளுபடி

வைகோவின் வழக்கை விசாரிக்க அதிகாரமுண்டு

பொடா மறு ஆய்வுக்குழு தெரிவிப்பு

வைகோ, நக்கீரன் கோபால் கைதுசெய்யப்பட்டதை எதிர்த்து நீதிபதி சகாரியா தலைமையிலான மத்திய அரசின் பொடா மறு ஆய்வுக்குழுவிடம் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதை விசாரிக்க மத்திய அரசின் பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு அதிகாரம் கிடையாது. தமிழக அரசின் பொடா மறு ஆய்வுக் குழுவே விசாரிக்கும் என்று நீதிபதி சகாரியா முன்னிலையில் தமிழக அரசு ஆட்சேபமனு தாக்கல் செய்தது.

அதற்கு மத்திய அரசு சார்பில் சட்டத்தரணி கே.என்.பட் பதில் தாக்கல்செய்தார். தமிழக அரசு சார்பில் சட்டத்தரணி டி.எஸ்வைத்தியநாதனும், மத்திய அரசு சார்பில் சட்டத்தரணி பட்டும் ஆஜராகி வாதாடினார்கள்.

மத்திய அரசு சட்டத்தரணி கே.என்.பட் வாதிடுகையில், கைதானவர் பொடா சட்டத்தின் கீழ் குற்றம்புரிந்தாரா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதுதான் பொடா மறு ஆய்வுக் குழுவின் வேலை. கைதானவர் பொடா சட்டத்தின் கீழ் குற்றம்புரியவில்லை என்பதற்கு ஆதாரத்தை பொடா மறு ஆய்வுக்குழு கண்டுபிடித்துவிட்டால், கைதானவர் மீது தொடரப்பட்ட வழக்கை மாநில அரசு வாபஸ்பெறுவது கட்டாயமாகி விடுகிறது என்று கூறினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சகாரியா - தமிழக அரசு ஆட்சேபமனு மீது 23 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி தமிழக அரசின் ஆட்சேபத்தை தள்ளுபடிசெய்து, நீதிபதி சகாரியா நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார்.

சகாரியா தலைமையில், உறுப்பினர்கள் ரகுமான், இமாமதார் ஆகியோரைக் கொண்ட பொடா மறு ஆய்வுக்குழு அளித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது-

வைகோ, நக்கீரன் கோபால் ஆகியோருக்கு எதிராக பொடா சட்டம் தவறாக பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கத்தான், தமிழக அரசிடம் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. அந்த விளக்கக் கடிதம் நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடும் செயல் என்று தவறாக கூறுவதை ஏற்கமுடியாது.

நீதிமன்ற விசாரணையிலுள்ள நடவடிக்கையை பொடா மறு ஆய்வுக் குழுவின் நடவடிக்கை பாதிக்காது. நீதிமன்றம் தடையின்றி தனது பணியைச் செய்யலாம். தமிழக அரசின் ஆட்சேபத்தை நிராகரிக்கிறோம். அதில் ஆதாரமோ, தகுதியோ இல்லை.

கையில் இருக்கும் ஆவணங்களைக் கொண்டு வைகோ, கோபால தொடர்பான இறுதி விசாரணை பெப்ரவரி 4 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கும் 5 ஆம் திகதி பகல் 11 மணிக்கும் நடக்கும். தேவைப்பட்டால் 6 ஆம் திகதியும் விசாரணை நடக்கும். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இறுதி விசாரணை 6 ஆம் திகதி முடிந்துவிடும் என்பதால், வைகோ விடுதலையாவாரா என்பது பற்றி அன்றே தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தி.மு.கவுடன் கூட்டணி தொடர்பாக கருணாநிதி – திருமாவளவன் பேச்சு

தமிழகத்தில் தி.மு.க. தலைமையில், ஜனநாயக முற்போக்கு கூட்டணி அமைந்துள்ளது. கூட்டணி தொடர்பாக, பேச்சுவார்த்தை நடத்த சென்னை கோபாலபுரத்தில் உள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி வீட்டுக்கு திருமாவளவன் நேற்றுக் காலை சென்றார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியை 30 நிமிடம் சந்தித்து திருமாவளவன் பேசினார். அப்போது தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மு.க.ஸ்டாலின், துரை முருகன் ஆகியோர் உடனிருந்தனர். சந்திப்புக்குப் பின் விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் நிருபர்களிடம் கூறியதாவது -

சில தினங்களுக்கு முன் செய்தியாளர்களைச் சந்தித்த கலைஞர், திருமாவளவன் எனக்கு பொங்கல் வாழ்த்து கூறவில்லை என்றும், என்னை நேரில் சந்திக்கவில்லை என்றும் மனவேதனையுடன் கூறினார்.

திராவிட இயக்கத்தின் முதுபெரும் தலைவர் கலைஞர் ஆதலால், அவரை நேரில் சந்தித்து பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். இந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமானது. கலைஞருக்கு பொங்கல் வாழ்த்து கடிதம் அனுப்பியிருந்தேன். தேர்தல் குறித்தும் பேசினோம். எங்கள் கருத்துக்களை கலைஞரிடம் தெரிவித்திருக்கிறோம். மறுபடியும் கலைஞரை சந்திப்போம்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியலில் மதிப்பளிக்கவேண்டும் என்று கலைஞரிடம் கேட்டிருக்கிறோம். தி.மு.க. கூட்டணியில் விடுதலை சிறுத்தை அமைப்பு இடம்பெறவேண்டும் என்று கலைஞர் தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

அதன்பிறகு, எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம்.வீரப்பன், ஜெகத்ரட்சகன் ஆகியோர் கருணாநிதியை சந்தித்தனர். இந்தச் சந்திப்பு காலை 10.30 மணி முதல் 11 மணி வரை நடந்தது. ஜெகத்ரட்சகன் தற்போது அரக்கோணம் தொகுதி எம்.பி.யாக இருப்பதால், அந்தத் தொகுதியை மீண்டும் அவருக்கே ஒதுக்கக்கோரி பேச்சுவார்த்தை நடந்ததாகத் தெரிகிறது.

இதன்பின்னர், நேற்று மதியம் கருணாநிதி ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் வேலூர் தொகுதி அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சிக்கும், அரக்கோணம் தொகுதி பா.ம.க.வுக்கு ஒதுக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில், கருணாநிதியுடன் பேசி தொகுதிகளை முடிவுசெய்வதற்காக, சோனியாவின் தூதராக தமிழக - புதுவை காங்கிரஸ் பொறுப்பாளர் கமல்நாத் நேற்று மாலை சென்னை வந்தார். கருணாநிதியை சந்தித்து காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகள் பற்றி இறுதி முடிவு செய்வார் என்று தெரிகிறது.

ஐப்பானியத்தூதுக் குழுவினர் அரசசார்பற்ற பிரதிநிதிகளுடன் பேச்சு

ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுமுன்தினம்மாலை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின இணைய செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மூன்று நிறுவனங்களைச் சேர்ந்த ஜப்பானியப் பிரதிநிதிகள் நான்குபேர் கலந்துகொண்டனர்.

பசுபிக் ஆசிய வளநிறுவன பிரதிநிதிகள் இணோகியு ரெய்கோ, இமானரி அயுக்கோ, பாரபட்சங்களை எதிர்ப்பதற்கான சர்வதேச நிறுவனப்பிரதிநிதி ஒனோயாமோ நோயோ, முரண்பாடுகளைத் தவிர்த்தலுக்கான நிறுவனப் பிரதிநிதி பியுற்று மோற்றோ சிச்சிக்கே ஆகியோரே இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களான தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஊற்று நிறுவனம், சர்வோதயம்,பால்நிலைக் கல்விக்கும் அபிவிருத்திக்குமான நிலையம், பெண்கள் முன்னேற்ற நிலையம் ஆகிய நிறுவனங்களை உள்ளடக்கிய பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களூடாக மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்கள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்ட ஜப்பான் பிரதிநிதிகள், புதிதாக மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பான அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டனர்.

சர்வதேச, அரசசார்பற்ற நிறுவனங்கள்மூலம் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள், மக்களை முழுமையாக சென்றடைவதில்லை எனவும், இடையிலேயே பெருமளவு நிதி செலவழிந்து விடுவதாகவும், ஜப்பான் பிரதிநிதிகளிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் பின் அரசியல் வாதிகளைக் காணமுடியாதுள்ளதாகவும், அதனால், பொதுமக்கள் தமது குறைகளை முறையிட்டு உரிய தீர்வு காண்பதென்பது இயலாதகாரியமாக உள்ளதாகவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது, புதிதாக மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களை - உள்ளூர அரசசார்பற்ற நிறுவனங்களூடாகவே மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய ஏற்பாட்டில் நடைபெற்ற சமாதானத்தை வலுவூட்டல் எனும் நிகழ்வில் - யாழ்.இந்து கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

மோட்டார் சைக்கிள் திருடிய நபர் முகமாலை சோதனைசாவடியில் கைது

(யாழ்ப்பாணம்)

திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் - முகமாலைச் சோதனைச்சாவடியைக் கடக்க முற்பட்ட வேளை, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இவர் ஒட்டிச்சென்ற ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிளின் இயந்திர இலக்கம் மற்றும் அடிச்சட்ட இலக்கம் முதலானவற்றைக் கொண்டே பொலிஸார் அது களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பதை அடையாளம் கண்டு அவரைக் கைது செய்தனர்.

இந்த மோட்டார் சைக்கிள் யாழ்.சுண்டிக்குளி, சென்ஜோன் வீதியில் வசிக்கும் வெற்றிவேல் இரத்தினம் என்பவருக்குச் சொந்தமானது என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி இரவு அவரது வீட்டிலிருந்து - இந்த மோட்டார் சைக்கிளுடன் கையடக்கத் தொலைபேசி, வீடியோ படப்பிடிப்புக்கருவி, ஒரு தொகுதி நகைகள், பணம் உட்பட பலபொருட்கள் களவாடப்பட்டதாக, யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இவரை விசாரணைக்குட்படுத்திய யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்கினராஜா சந்தேகநபரை எதிர்வரும் பெப்ரவரிமாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, இவரை எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்குட்படுத்த இருப்பதாகவும் தெரியவருகிறது. சுன்னாகம் பகுதியில் வசிக்கும், அரியநாயகம் பாலச்சந்திரன் என்பவரது மோட்டார் சைக்கிளை பலவந்தமாக அபகரித்தாக இவர் மீது கடந்த வருடம் டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனாலேயே இவர் சுன்னாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பிற்குட்படுத்தவுள்ளார். (ப)

கொக்குவில் சுகாதாரப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொதுசுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல் - நாளை மறுதினம் தொடக்கம் மூன்று தினங்கள் வரை நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை நேதாஜி சனசமூக நிலையத்திலும், 10.45 மணிமுதல் 12 மணிவரை மனோன்மணி சனசமூக நிலையத்திலும், 1 மணிமுதல் 2.30 மணிவரை வளர்மதி சனசமூக நிலையத்திலும்,

மறுநாள் காலை 9 மணி முதல் 10.30 மணிவரை குளப்பிட்டி கிராம அபிவிருத்தி சங்கத்திலும், 10.45 மணிமுதல் 12 மணிவரை வராகி அம்மன் கோயிலடியிலும், 1 மணிமுதல் 2 மணிவரை கேணியடி கலைமகள் சனசமூக நிலையத்திலும்,

வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை காந்தி சனசமூக நிலையத்திலும், 10.45. மணிமுதல் 12 மணிவரை கலைவாணி சனசமூக நிலையத்திலும், 1 மணிமுதல் 2.30 மணிவரை கொக்குவில் சனசமூக நிலையத்திலும் நடைபெறுமெனப் பொதுசுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களை இறக்கிய 787 ஆம் இலக்கத் தனியார் பஸ்

இளவாலையிலிருந்து மானிப்பாய வீதியூடாக, யாழ்.நோக்கி வந்த 787 ஆம் இலக்க தனியார் சிற்றூர்தி ஒன்று, பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பாமசிச் சந்தியடியில் கடந்த செவ்வாய்க கிழமை இடம்பெற்றது.

நகரப்பகுதிப் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் ஐவர், இந்தவீதியூடாக வந்துகொண்டிருந்த 787 ஆம் இலக்க தனியார் சிற்றூர்தியில் ஏறியபோது, அவர்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்ஸில் வருமாறுகூறி இறக்கி விட்டுள்ளனர்.

இதனால், மிகவும் மனவேதனை அடைந்த மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு வழியின்றித் திண்டாடியுள்ளனர்.

இந்த வீதியூடாகப் பயணிக்கும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 787 ஆம் இலக்க பஸ், உரியநேரத்துக்கு சேவையை நடத்தாமையாலேயே மாணவர்கள் இத்தகைய நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகின்றது.

தனியார் சிற்றூர்த்தி நடத்துநர் இவ்வாறு மாணவர்களை இறக்கிவிட்டுச் சென்றமை குறித்து, அதில் பயணம்செய்த பயணிகள் விசனம் தெரிவித்தனர். (71)

சின்னஞ் சிறு செய்திகள்

வைத்திய சேவை குறித்துக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அப்பலோ மருத்துவமனை வைத்திய நிபுணர்களின் வைத்திய சேவையை - யாழ்.மக்களுக்கும் வழங்குவது தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று நடைபெறவுள்ளது.

கன்னாதிட்டி வீதியிலுள்ள 'நோதோன் கெஸ்ற்கவுஸ்சில்' நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், முக்கிய விடயங்கள் பலவும் கலந்துரையாடவுள்ளன. (ச)

தொலைத் தொடர்பகத்தில் திருட்டு

(யாழ்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள தொலைத் தொடர்பகம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இரவு உடைக்கப்பட்டு, பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருடகள் திருடப்பட்டன. கணினிகள் போட்டோபிரதி, தொலைநகல் இயந்திரங்கள் என்பனவே திருடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (111)

கணினிப்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி முறைசாரா பிரிவினால் நடத்தப்படும் கணினிப் பயிற்சிகளுக்கு, மாணவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபபங்களை பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (46)

இனிப்பு வியாபாரிக்கு அபராதம்

போலி சாயமூட்டிய இனிப்பு வியாபாரிக்கு - பருத்தித்துறை நீதிமன்றம் அபராதம் விதித்தது. தேன்குழல் இனிப்பு வகைகளுக்கு மனித பாவனைக்கு தீங்கான போலி சாயமூட்டியவருக்கு எதிராக, பருத்தித்துறை நீதிமன்றில் யாழ்.மாவட்ட உணவு பரிசோதகரால் வழகுதாக்கல் செய்யப்பட்டது. பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம், நீதிவான் குறித்த வியாபாரிக்கு 5 ஆயிரம் ரூபா அபாராதமாக விதித்தார். இதேவேளை, உரிய அனுமதி பெறாது ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் நடத்தியவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் நீதிவானால் விதிக்கப்பட்டது.

பொது ஊழியர்சங்க அங்கத்தவர் கூட்டம்

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க பொது ஊழியர்சங்க அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம்- இன்று மட்டக்களப்பு வெஸ்லிக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது. காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில், பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சமூகசேவை அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குருகுலத்தின் ஆண்டு விழா

கொழும்புத்துறையில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி பீடம், கமலா பெண்கள் குருகுலம், வரதராஜா ஆணகள் குருகுலம் என்பன ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தி நிகழ்வுகள் இன்று காலை 4 மணி முதல் இடம் பெறவுள்ளது.

பிரம்ம ஞானி சுவாமி ஸ்ரீ ராஜ் குமார் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். யாகம், விசேட அபிஷேகம் ஆராதனைகள், பஜனை, விருந்தினர் உரைகள் இடம்பெற்று, குருகுல மாணவரின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். பீடத்தின் பணிகளில் பங்கெடுத்துள்ளோர் இறை தொண்டர்பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். (111)

வல்வை ஒன்றிய பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

வல்வை ஒன்றிய வல்வெட்டித்துறை கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் - இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை யாழ்.வீதியில் எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள, வல்வை ஒன்றியத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும். புதிய நிர்வாகசபைத் தெரிவும் இந்த கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

நடைபாதைக் கடைகள் முனீஸ்வரன் ஆலய முன்றலுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் சனசந்தடிமிக்க முனீஸ்வரன் வீதிப்பகுதியில் அமைந்துள்ள நடைபாதைக் கடைகள், முனீஸ்வரன் ஆலய சூழலுக்கு மாறறப்படவுள்ளன. இதில் 150 வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கப்படவுள்ளது.

இதன் பின்னர் நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோரது உடைமைகள் பறிக்கப்பட்டு, நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இத்திட்டம் நாளை திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. (111)

மெய்வல்லுநர் போட்டி

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, குடத்தனை தமிழ் கலவன் பாடசாலையின்- வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி பாடசாலை அதிபர் க.க. யோகநாதன தலைமையில், நடைபெறவுள்ளது.

இதில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைதிய அதிகாரி எஸ்.கதிரவேல் பிள்ளை பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகனும், மருதங்கேணி கல்விக்கோட்ட அதிகாரி பா.இரகுநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப)

உரப்பையில் எடுத்துவரப்பட்ட பாண் அழிப்பு

உரப்பையில்கொண்டுசென்ற பாண் வகைகள் - நெல்லியடி சுகாதார பரிசோதகரால் அழிக்கப்பட்டன. மாலுசந்திப்பகுதியில் அதிகாலைவேளை, உரப்பையில் பாண் எடுத்துச் சென்றவரை நெல்லியடி பொது சுகாதார பரிசோதகர் இடைமறித்து சோதனை செய்ய முற்பட்டார். பாணை உரப்பையில் கொண்டு வந்த குறித்த நபர் உரப்பையை தூக்கி எறிந்துவிட்டு தலைமறைவாகிவிட்டார். உரப்பையில் காணப்பட்ட பாண், பணிஸ் வகைகள் சுகாதார பரிசோதகரால் அழிக்கப்பட்டன. (13)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

விளையாட்டு அரங்கம்

கேணல் கிட்டு வெற்றிக் கேடயத்தை சுவீகரித்த யாழ். இளம் கென்றீசியர் அணி

மாவீரர் வெற்றிக் கேடயத்துக்காக மாவட்ட மட்டத்தில் இருபதுக்கு மேற்பட்ட கழகங்கள் போட்டியிட்டு, வெற்றிபெற்ற அணிகள் லெப்.கேணல் கிட்டு சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டன. ஐந்து நாட்கள் தொடர்ந்த இந்த சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட எல்லாக் கழகங்களுமே மிகப் பலமானவையாக அமைந்திருந்தன. திறமையாகவும் ஆட்ட நுட்பங்களுடனும் எல்லா அணிகளுமே காணப்பட்டமை மிகச்சிறப்பாக இருந்தது. யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அணிகள் - தமது சிறப்பான ஆட்டத்துடன் நுட்பங்களையும் வெளிப்படுத்தி அரையிறுதி வரை முன்னேறியிருந்தமை குறிப்பிடும்படியான ஒரு அம்சமாகும்.

இந்தப் போட்டி நடத்தப்பட்ட விதம் பற்றிக்கூறிய புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் - பங்குபற்றிய அணிகள் போட்டி ஒழுங்கமைப்பாளர்களின் விதிகள், ஒழுங்கு முறைகளுக்கு கட்டுப்பட்டு நடந்தது மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒரு விடயமாகும். கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில், பல அணிகள் கலந்துகொண்டன. அதில், சில சந்தர்ப்பங்களில் வீரர்கள் ஒழுங்கீனமாக நடந்திருக்கின்றனர். கழக ஆதரவாளர்களால் குழப்பங்கள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இங்கு அப்படியான ஒரு சந்தர்ப்பத்தைக் கூடக் காணமுடிவில்லை.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எல்லைப் படை மாவீரர் போட்டியும் இப்படியானதொரு சிறப்பான போட்டியாகவே அமைந்திருந்தது. 10 ஆண்டுகளுக்கு பின் நடந்த மிகச்சிறப்பான போட்டியாக அதனைக் குறிப்பிடமுடியும் என்றார்.

தாய்நாட்டை நேசிக்கும் பண்பை நீங்களும் பெற்றுக்கொள்ளவேண்டும் என எதிர் பார்க்கின்றேன். நீங்கள் வியர்வை சிந்தி விளையாடிய இந்த மண்ணை, எத்தனையோ போராளிகள் குருதி சிந்தி விடுதலைபெற வைத்தார்கள் என்பதை நீங்கள் மறக்கக் கூடாது என, பரிசளிப்பு வைபவத்தில் சிறப்புரையாற்றிய குட்டிசிறி மோட்டார் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் லெப். கேணல் அமுதன் கூறினார். அத்துடன், இந்தப் போட்டி தொடர்ந்தும் ஆண்டுதோறும் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

குட்டிசிறி மோட்டார் படையணியின் ஆதரவுடன் கேணல் கிட்டு வெற்றிக் கேடயத்திற்கான இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தின் மாவீரர் வெற்றிக்கேடயங்களை சுவீகரித்துக்கொண்ட மாவட்டங்களின் அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட இந்தப் போட்டியில், யாழ். மாவட்டத்தின் இளம் ஹென்றியசர் அணி, முல்லைத்தீவு விக்னேஸ்வரா அணியை எதிர்த்தாடி 1 - 0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. இந்தச் சுற்றுப்போட்டியில் - கிளிநொச்சி சந்திரோதையா அணி, மன்னார் புனித அந்தோனியார் அணி, வவுனியா மருதநிலா அணி, மட்டக்களப்பு கடல் மீன்கள் அணி, அம்பாறை யங்லைன் அணி என்பன கலந்து கொண்டன.

பண்பட்ட ஆட்டமாக நெறிமுறைப்பட்டு தமிழர் தாயகத்தின் உதைபந்தாட்டம் சிறப்பான ஒரு இடத்தைப்பெற ஆட்டவீரர்கள், நடுவர்கள், உதைபந்தாட்டத்தை நேசிக்கும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் என எல்லோருமே உங்கள் பங்களிப்பைச் செலுத்தவேண்டும். விளையாட்டின் ஊடாகவும் தமிழர் தேசியம் காக்கப்படவேண்டுமென, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தனது கருத்துக்களைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் குட்டிசிறி மோட்டார் படையணியின் தளபதி கேணல் பானு, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு.வே.இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இ.இராசநாயகம், ஆசிய மெய்வல்லுநர் கலாநிதி எதிர்வீரசிங்க ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

கென்றீசியர் அணிவீரர்கள்

1. லோகலிங்கன்	08. அன்ரனி	15. கலிங்டன்
2. எமில் லூபன்	09. ராஜ்	16. டனிஸ்ரன்
3. தனேஸ்	10. சுரேந்தர்	17. கிறேசியன்
4. விக்கி	11. யோசுவா	18. ரஜீவ்
5. மினோஜன்	12. குயிந்தன்	19. சயந்தன்
6. ராஜா	13. விமலச்சந்திரன்	20. றொபின்சன்
7. ஸ்ரீபன்	14. சிவகுமார்	

உதைபந்தாட்ட வளர்ச்சியின் முதற்படி

நீ ஒரு புதுக்கவிதை

ஸ்ரீவோ சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்றதும், அவருக்கு அடுத்ததாக அந்தத் தகைமையைக் கொண்டவர் யார் என்றொரு வினா எழுந்தது. இன்று திறமைவாய்ந்த பலர் இருந்தாலும் ஒப்பீட்டளவில் மிகவும் பாரிய இடைவெளியுடன் முன்னணியில் நிற்பவர் சச்சின் ரமேஸ் ரெண்டுல்கர் தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. 31 வயதாகும் சச்சின் தனது சர்வதேசக் கிரிக்கெட் உலகிலுள் காலடி எடுத்து வைத்தது 1989 இல் - தனது 17 ஆவது வயதில். அதுவும் பாகிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் மணணில் (கராச்சி) இன் னும் னும் 7 வருடங்கள் அதாவது ஏழு வருடங்கள் இன் ஓய்வுபெற்ற வயதான 38 வரை ஸ்ரீவோ சர்வதேச கிரிக்கெட் உலகில் தொடர்வாராக இருந்தால் சாதனைகள் அத்தனையுமே சச்சின் வசம்தான் இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

சச்சின் இதயமே இதயமே

இந்த வகையில் சச்சினுடன் பல்வேறு சர்வதேச கிரிக்கெட் வீரர்களை ஒப்பீடு செய்யும் போது, பல சுவையான விடயங்களை அவதானிக்க முடியும். ஏறத்தாழ சர்வதேச கிரிக்கெட் உலகில் 14 வருடங்களைக் கடந்தும் தடம் பதித்து முன்னோக்கும் வீரர்களென்றால், அவர்கள் சச்சினும், நியூசிலாந்தின் கிறிஸ் கெயின்சும் மட்டும் தான். 1989 இல் அறிமுகமான கிறிஸ்கெயின்ஸ் - தனது முதலாவது ஆட்டத்தை அவுஸ்திரேலியாவிற்கு எதிராக அவுஸ்திரேலியாவில் ஆரம்பித்தார். ஆனால், காலத்திற்கு காலம் உபாதைகளை எதிர்கொண்ட கிறிஸ்கெயின்ஸ் விளையாடியது 56 டெஸ்ட் போட்டிகள் மட்டும்தான். ஆனால் சச்சின் விளையாடியுள்ளவை 111. ஒருசில மாதங்கள் 1990 இடைவெளியில் களமிறங்கிய பாகிஸ்தானிய வீரர் முஸ்டாக் அஹமட் விளையாடிய ஆட்டங்கள் 52. சச்சினை விட்டால் 100 டெஸ்ட் போட்களுக்கு முகம் கொடுத்தவர்கள், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பிரைன் லாறா, அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன்(107) இருவர் மட்டுமே. இவர்களை விட்டால் தென்னாபிரிக்காவின் காரிகேர்ஸ்டன்(97), அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளெயின் மக்ரா (95), பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக்(91) மற்றும் இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவரும் தற்போதைய அணிவீரருமான நசார் ஹுசேன் (91) இவர்களில் 100 ஆட்டங்களைத் தாண்டி ஓடப்போகிறவர்கள் யார்? யார்?

சச்சின் இதுவரையில் 32 சதங்களுடன் டெஸ்ட் ஓட்டங்களாக 9265 ஓட்டங்களையும், அடுத்து 24 சதங்களுடன் பிரைன் லாறா 9117 ஓட்டங்களுடனும் இருக்கிறார்கள். இவர்களைவிட்டால் 7029 ஓட்டங்களுடன் காரி ஹேர்ஸ்டன் உள்ளார். இதேவேளை சச்சினை முந்திக்கொண்டு சுனில் கவாஸ்கர் 10122 ஓட்டங்களுடனும், ஸ்ரீவோ 10927 ஓட்டங்களுடனும், முதலாவது இடத்தில் அலன் போல்டர் 11174 ஓட்டங்களுடனும் இருக்கிறார்கள். இவர்களை சச்சின் முந்துவரா? முதலிடத்தைப் பெற எவ்வளவு காலம் செல்லும்? சதங்களைப் பொறுத்தவரை அதிகூடிய டெஸ்ட் சதங்களான 34 சதங்களை எட்ட இன்னும் வெகுதூரம் சச்சின் செல்லத்தேவையில்லை. ஸ்ரீவோவுடன் சமமாக 32 சதங்களுடன் களத்தில் நிற்கிறார் சச்சின்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் என்ற வகையில், சச்சின் குவித்துள்ள ஓட்டங்கள் 12792 ஓட்டங்கள், சதங்கள் 36. இவரை அடுத்து இன்சமாம் உல் ஹக் 9389 ஓட்டங்களும், சனத் ஜெயசூரிய 9172 ஓட்டங்களும், கங்கூலி 9049 ஓட்டங்களும் பெற்றுள்ளனர். இதில் கங்கூலியின் ஒருநாள் சதங்கள் 22 பெற்று இரண்டாவதாக இருக்கிறார், ஆனால், சச்சினை விட 14 சதங்கள் குறைவாக.

சச்சின் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் தற்போது மொத்தம் 68 சதங்கள் போட்டுச் சாதனை படைத்துள்ளார். இதில் எல்லோரும் நம்பிக்கையுடன் எதிர்வுகூறும் ஒரு விடயம் கிரிக்கெட் வரலாற்றில் சச்சின் ஓய்வுபெறுமுன் மொத்தமாக 100 சதங்கள் (சதங்களில் சதம்) என்ற இலக்கைக் கடந்துசெல்வார் என்பதுதான். 2003 சச்சினுக்கு இறங்குமுகமாக இருந்தது என்னோ உண்மைதான். ஆனால் திருஷ்டி கழித்தால்போல அவுஸ்ரேலியாவிற்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் 241,60 என்ற ரன்களைக் குவித்து முன்னோக்கிப் பாய்ந்திருக்கிறார். அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குச் செல்லப்போகும் சச்சினுக்கு இப்போது வயது 31. ஆனால், முதன்முதலாக சச்சின் பாகிஸ்தானுக்கு சர்வதேச ஆட்டக்காரராகச் சென்றது. 1989இல் 17 வயதினிலே.

- நிர்மலன்.

அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்

முன்னாள் ஆசிய தடகளப் போட்டிகள் உயரம் பாய்தல் தங்கப்பதக்க வீரர் எதிர்வீரசிங்கம் இலங்கையின் மிகுந்த உயர்தரம் வாய்ந்த நம்பிக்கை நட்சத்திரங்களுக்கு உயரம் பாய்தல் பயிற்சியள ிக்கவுள்ளார். தற்போது அமெரிக்காவில் வசிக்கும் இவர் இலங்கை வந்துள்ளார். இவர் உயரம் பாய்தலில் ஐந்து நாள் வதிவிடப் பயிற்சி நெறியொன்றினை மேற்கொள்ளவுள்ளார். அதோடு இலங்கையின் உயரம் பாய்தல் பயிற்சியாளர்களையும் இவர் பயிற்றுவிக்கவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளார். இலங்கைத் தடகள சங்கத்தின் தலைவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவராக விளங்குபவருமான சுனில், ஜயவீர ஆவார். இந்த வதிவிடப் பயிற்சி முகாம் மகரகமவில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் எதிர்விரசிங்கம் தங்கியிருந்து பயிற்சிகளை வழங்குவார். மேலும், இந்தப் பயிற்சி நெறியை இலவசமாகவே நடத்திக் கொடுக்க இவர் முன்வந்துள்ளார். இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ளவுள்ளோர் வரிசை பின்வருமாறு :- டபிள்யூ.பி.மஞ்சுள குமார (2.17மீ), எச்.ஜே.சி.டிசில்வா (2.08மீ), பத்திரன (2.05மீ), மொகமட் சமீர் (2.00மீ), எம்.எல்.எம்.பிரிஸ் (1.72மீ), மதுவந்தி (1.71மீ), போதிவெல (1.68மீ), ரன்ஜீனாராஜா (2.07மீ), ரட்ணசிறி (2.05மீ), வினோதினி தரங்கா (1.68மீ).

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

ஆட்சி மாற்றம்

லக்ஸ்மன் புதியவரலாறு

முடிந்தும் முடியாத உணர்ச்சித் மோதிய டெஸ்ட் போட் சக்கரவர்த்தி யார் என் அவுஸ்ரேலியா, சிம் சர்வதேசப் போட்டிகள் அவற்றில் முதல் வாரம் அலசி ஆராய்ந்து நடைபெற்ற இந்திய - சிம் ஏனைய மூன்று போட்டிக கடந்த இந்திய

டிகளின் மத்தி யிலும், ரசிகர்களின் எதிர் பார்ப்புக்களின் மத்தியிலும் ஆரம் பித்த இந்தப் போட்டியில், இந்திய அணி நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடத் தொடங்கியது.

இந்திய அணியின் மின்னல்வேக அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் சேவாக்குக்குப் பதிலாக அணித்தலைவர் சௌரவ் கங்கூ லியும், மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின் ரெண்டுல்கரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினார்கள். சௌரவ் கங்கூலி அதிரடியாகவும், சச்சின் நிதானமாகவும் ஆடிக்கொண்டிருந்தபோது, சௌரவ் கங்கூலி எதிர்பாராத விதமாக பிரட் வில்லியம்ஸின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஆனால், தொடர்ந்து வந்த லக்ஸ்மன் - சச்சின் ஜோடி அபாரமாக ஆடியது. சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த சச்சின் எதிர்பாராமல் தசைப்பிடிப்பினால் அல்லற்படத்தொடங்கினார். ஆனாலும், வலியைப் பொருட்படுத்தாது சிறப்பாக ஆடி, 86 ஓட்டங்களைக் குவித்தார். அவர் ஆட்டமிழக்க, தொடர்ந்துவந்த ராவிட் - லக்ஸ்மன் ஜோடி சிறப்பாக ஆடினார்கள். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக குறிப்பிட்ட நேரத்திற்குமேல் களத்தில் இருந்தால் பின்னர் அவர்களைப் பிரிக்க முடியாது என்பதை அவுஸ்ரேலிய அணி பலதடவை உணர்ந்துள்ளது அதேபோலவே அமைந்தது அவர்களின் ஆட்டம். இந்த ஆட்டத்தில் லக்ஸ்மன் ஒருநாள் போட்டியில் தன் மூன்றாவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய அவுஸ்ரேலிய அணி தொடக்கம் சிறப்பாக ஆரம்பித்தாலும், பின்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடாததால், கௌரவமான தோல்வியைத் தழுவினார்கள். ஆனால், அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்டவீரர் மத்தியு ஹேய்டன் சதம் பெற்றார். இந்திய அணியின் இளம்பந்து வீச்சாளர்களான இம்ரான் பதான், பாலாஜி ஆகியோரின் பந்துவீச்சு சிறப்பாக இருக்கிறது.

அடுத்து 20 ஆம் திகதி கோபோர்ட்டில் நடைபெற்ற இந்திய -சிம்பாவே அணிகளுக் கிடையிலான போட்டியில் - இந்திய அணியில் சச்சின், சேவாக், அகர்கர் ஆகியோர் இல்லாமல் களமிறங்கிய அணியில் ஆரம்பத்துடுப்பாட்டவீரர்களாகக் களமிறங்கிய

18 ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெற்ற - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி -இந்திய ரசிகர்கள் பலநாள் எதிர்பார்ப் புக்கு தகுந்த விருந்தளித்த போட்டி. இந்திய அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடினால், 44.4 வீதம் வெற்றி வாய்ப்பு உள்ளது என்ற விமர்ச கர்களின் கணிப்பீ

குட்டிப்புயல் பார்த்திவ் பட்டேல் - கங்கூலி ஜோடி அவ்வளவாக சோபிக்காது போனாலும், அடுத்துவந்த யுவராஜ்சிங், ராவிட் ஜோடி அற்புதமாக விளையாடி அணியைப் பலப்படுத் தினார்கள்.

இந்தப் போட்டியில் சிம்பாவே அணியும் வழமைக்கு மாறாக சிறப்பாக விளையாடியது. கிரான்பிளவர் - வேர்மியுலன் ஜோடி சிறப்பான அடித்தளத்தை இட்டுக்கொடுத்தது. ஆனால், இந்தநிலையை நீடிக்கவிடாமல் திணறடித்தார்கள் கங்கூலியும், பாலாஜியும். துடுப்பாட்டத்தில் விட்டகுறையை பந்துவீச்சில் நிவர்த்திசெய்தார் கங்கூலி. யுவராஜ்சிங்கின் களத்தடுப்பு பிரமாதமாக இருந்தது. இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரரும் அவரே.

தற்பொழுது கிரிக்கெட் உலகின் எதிர்பார்ப்புக்கள் யாவும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏனைய போட்டிகளை விட்டு இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் மோதும் போட்டிகள் மீது திசை திரும்பியுள்ளன. அவ்வளவு அமர்க்களமாக அமைகிறது இந்த இரு அணி கள் விளையாடும் போட்டிகள். கிரிக்கெட் உலகத்தின் சக்கரவர்த்தி யார் என்பதை இந் தப் போட்டித் தொடர் நிரூபிக்கும்.

அந்த வகையில் ஆரம்பித்த ஏழாவது லீக் போட்டி 22 ஆம் திகதி சிட்னியில் இந்திய -அவுஸரேலிய அணிகளுக்கிடையில் தொடங்கியது. சச்சின், சேவாக், கும்ளே ஆகியோர் இல்லாமல் ஆரம்பித்த இந்தப் போட்டியில், பார்த்திவ் பட்டேல் - கங்கூலி ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கி சொற்பநேரத்தில் கங்கூலி தனது வழமையான பலவீனத்தால் ஆட்டமிழந்தார். ஆனால் இளம் சூறாவளியாக எதிர்காலத்தில் உருவாகப்போகும் பட்டேல் - அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களை ஒரு பிடி பிடித்தார். அவருக்குப் பாடம் நடத்தியபடி அவுஸ்ரேலியாவின் இன்னொரு சிம்ம சொப்பனமான வி.வி.எஸ் லக்ஸ்மன்.

நிச்சயமி

கில்கிறிஸ்ட் மண்ணில் ரொக்கெட்

ஆனால், பட்டேல் ராவிட் டும் ஆட்டமிழக்க அவரைத் தெடர்ந்து வந்த ராகுல் நீண்டநேரம் நிலைக்காமல் ஆட்டமிழந்தார். அபாயகரமான ஜோடி பிரிந்தது என்று அவுஸ்ரேலியா குதூகலிக்க, சகோதரர் களே நான் ஒருவன் இருக்கிறேன் என்று அனல்பறக்க ஆடியவர் - ஆபத்தான இடது கைத்துடுப்பாட்ட வீரர் யுவராஜ்சிங். இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 213 ஓட்டங் களை குவித்து சாதனைபடைத்தது. யுவராஜ்சிங் 122 பந்துகளில் 139 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 106 ஓட்டங்களை யும் பெற்றனர்.

அடுத்து, களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி சீண்டிய சிங்கமாக சிலிர்த்தெழுந்தது. ஓட்டச்சராசரி 7.5 ஐ விட்டு இறங்க மறுத்தது. மழை குறுக்கிட, 34 ஓவர்களில் 225 என்ற ஓட்ட எண்ணிக்கை இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், அவுஸ்ரேலிய அணி ஓட்ட எண்ணிக்கை 150 ஐ தொட்டதும், விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக சரியத் தொடங்கின. இந்திய அணி சிறந்த பந்து வீச்சாலும், களத்தடுப்பாலும் அவுஸ்ரேலியாவை நெருக்கிக் கொண்டு வந்தது. இறுதியில் 3 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் பிரெட்லி அடித்த ஒரு சிக்ஸ் போட்டியை திசைமாற்றியது. ஆனால் அவுஸ்ரேலிய அணி மழையின் கருணையால் மானம் போகாமல் தப்பியது. மழைவராமல் இருந்தால், 296 ஓட்டங்கள் வெற்றியிலக்காகக் கொண்ட அவுஸ்ரேலிய அணி 240 ற்குள் சுருண்டிருக்கும்.

மழை வந்ததால் தப்பித்தார்கள். தொடர்ந் தும் வரும் போட்டிகளின் ஆராய்வை அடுத்த வாரங்களில் பார்ப்போம்.

பல்லாயிரம் ரசிகர்களின் வேண்டு கோளை ஏற்று பலாலியில் இயங்கும் **ESPN STSR SPORTS** மீள் ஒளிபரப்பு நிலையத்தினர் போட்டிகளை ஒளிப ரப்பி வருகின்றனர். அவர்களுக்கு ரசி கர்களின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை, தொடர்ந்தும் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மாயவன்-

பாதை தெரியுது பார்

நியூசிலாந்து -பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ஒருநாள் போட்டித் தொடர் ஒன்று நடைபெற்று முடிந்துள்ளது. ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், நியூசிலாந்து அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. தொடரை நியூசிலாந்து கைப்பற்றினாலும், பாகிஸ்தான் அணி பலம் குறைந்த அணி என்ற கருத்தை நியூசிலாந்து அணியின் வெற்றி எடுத்துக்காட்டவில்லை.

ஸ்ரீபன் பிளெமிங் நெஞ்சத்தைக் கிள்ளாதே

பலம்மிக்க இரு அணிகளுக் டித் தொடராகவே இந்தப் பாகிஸ்தான் அணி நியூசி றியை பறிகொடுத்த போட் றன.

ஒருநாள் போட்டித் பாகிஸதான் அணி நியூசி எப்படி இருந்தது என்று விடயமாக உள்ளது. இந் மதிப்படுவதன்மூலம் ஓர பாகிஸ் தான்

கிடையே நடைபெற்ற விறுவிறுப்பான போட் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. லாந்து அணியிடம் மயிரிழையில் வெற் டிகளும் இந்தத் தொடரில் இடம்பெற்

தொடரினை நோக்குவதற்கு முன்னர், லாந்து அணியின் வெற்றிக்கான வாய்ப்பு கவனிக்க வேண்டியது முதன்மையான தக் கவனிப்பு அணித்தலைவர்களை ளவு பூரணமாகும் என்று தோன்றுகிறது. அணியின் தலைவர் இன்ஸமாம் உல் ஹக். இவர் தோற்றத்தில் மட்டுமல்ல, துடுப் பாட்டத்திலும் ஒரு மலை என்று குறிப்பிடலாம். ஆடத்தொடங்கி னால் அசைக்க முடியாத - இல குவில் வெளியேற்றிவிடமுடி யாதபடி நிலைத்து நின்று ஆடக்கூடியவர். அணியில் அவ்வப்போது ஏற்படுகின்ற மோசமான சரிவுகளை ஓர ளவு நிமிர்த்தி நிற்கச் செய்யும் திறமைமிக்க வர். நியூசிலாந்து அணி யுடனான போட்டிகளில் தனது பங்களிப்பை வழங்கி அணிக்கு வெற் றியைப் பெற்றுத்தரு வராக கருதப்பட்டவர். நியூசிலாந்து அணி யைப் பொறுத்தவரை, அதன் தலைவர் தோற் றத்தில் விலிமையற்றவராக காணப்பட்டாலும், நிறைந்த மன வலிமை படைத்தவர். உலகக் கோப்பை போட்டிகளில் தென் ஆபி ரிக்காவுடனான போட்டி ஒன்றில், தனது அற்புதமான ஆட்டத்தின் மூலம் தென் ஆபிரிக்க அணியை வெற்றி கொள்ளச் செய்தவர். பிளமிங்கின் ஆட்டத்தை இந்தத் தொடர்களில் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்தனர்.

பாகிஸ்தான் அணியின் தலைவர் பதவி, சமீபகாலமாக ஒரு நிலையானதாக இல்லை. தலைமைப் பதவிக்கு வந்த சூடு ஆறமுன்னரே, தலைமைப் பொறுப்பில் வந்தவரிடம் அது பறிக்கப்பட்டு விடுகிறது. இந்தச் சூழ்நிலை - பாகிஸ்தான் அணியின் வெற்றிப்பாதை யில் சில தடங்கல்களை ஏற்படுத்தி இருக்கலாம்.

நியூசிலாந்தைப் பொறுத்தவரை, இந்த நிலைமை இல்லை. உலகக் கோப்பை போட்டி யில் இருந்தும் அதற்கு முன்னரும் இன்று வரையும் அணித்தலைவர் பொறுப்பில் பிள மிங் உள்ளார். இந்தக் காலப்பகுதிகளில் பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பு பல வீரர்களின் கைக்கு மாறியுள்ளது.

நடைபெற்று முடிந்த ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித்தொடரில் நான்கு போட்டிகளை நியூசிலாந்து அணி வென்றுள்ளது. ஒரு போட்டியில் மாத்திரமே பாகிஸ்தான் அணி வென்றுள்ளது.

நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப்

பெற்றது. இந்த இலக்கை 47 ஓவர் களில் அடைந்து 6 விக்கெட்டுக் களால் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இந்த வெற்றி பாகிஸ்தான் அணியின் இந்த தொடரில் பெற்ற முதலும் கடைசியுமான வெற்றியா கவே அமைந்துவிட்டது.

பாகிஸ்தான் அணியின் இந்த வெற்றி இரண்டாவது போட்டியில் இடம்பெற்றது முதல் போட்டியில் நியூசி லாந்து வெற்றிபெற்றது.

இந்த நிலையில், மூன்றா வது போட்டி ரசிகர்களால் பெரிதும் பரபரப்பாக எதிர்பார்க் கப்பட்டது. இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான், இந்தப் போட்டி யில் தனது துடுப்பாட்டத் திறனை வெளிப்படுத்தி, 255/09 என்ற இலக்கை நியூசிலாந்துக்கு நிர்ணயித்தது. பாகிஸ்தான் இந்த போட்டியில் வெற்றி பெறும் என்றே அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது.

அப்துல் ரசாக் மின்னல்

ஆனால் நியூசிலாந்து அணியின் தலைவர் பிளமிங் (115) அபார ஆட்டத்தின் காரணமாக 46.3 ஓவரில் 03 விக்கட்டுக்களை மட்டுமே இழந்து நியூசிலாந்து பாகிஸ்தனை வென்று விட்டது.

நான்காவது போட்டியின்போது நியூசிலாந்து 2 பாகிஸ்தான் 1 என்ற நிலையில் வெற்றிகளைப் பகிர்ந்து கொண்ட நிலைமை, இந்தப் போட்டி விறுவிறுப்பாக அமையும். பாகிஸ்தான் இதில் வெற்றி பெற்று விடும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். பாகிஸ்தான் வீரர்களும் அத்தகைய மன அழுத்தத்திலேயே இருந்திருப்பார்கள்.

இத்தகைய ஒரு நிலையில் பாகிஸ்தான் வெறும் 126 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து, ஒரு பரிதாபகரமான நிலையை அடைந்தது. நியூசிலாந்து சரியாக இந்த நிலையைப் பயன்படுத்தி இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து, 22.5 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது. இந்த வெற்றி மூலம் நியூசிலாந்து தொடரையும் கைப்பற்றியது.

ஐந்தாவது போட்டி நியூசிலாந்துக்கு வெற்றி முக்கியமாக இருக்கவில்லை. அந்த ஒரு மனநிலையே அவர்களை நன்றாக ஆடச்செய்தது. 307 ஓட்டங்களை பாகிஸ்தான் வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பாகிஸ்தான் தொடரை இழந்த நிலையில் இந்த போட்டியை வென்று விட்டால் நிம்மதி - மரியாதை என்று கருதி, அந்த உற்சாகத்தோடு ஆடத்தொடங்கியது. பாகிஸ்தான் வெற்றி இலக்காக கடைசி எல்லைவரை துரத்திச் சென்று மயிரிழையில் தோற்றதாக விமர்சகர்கள் எழுதியுள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் வீரர் அப்துல் ரசாக் 5 சிக்சர்கள் 9 பவுண்டரிகள் அடங்கலாக 89 ஓட்டங்களை வெறும் 40 பந்துகளில் அடித்து ஆடிப்பெற்றுக் கொண்டார். பாகிஸ்தான் ரசிகர்களை குஷிப்படுத்தினார். இப்படியான ஒரு நிலையில் 303 ஓட்டங்களை மட்டுமே பெற்று 49.3 ஓவரில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 4 ஓட்டங்களால் பாகிஸ்தான் தோற்றது.

நியூசிலாந்து அணி டோட்டித்தொடரை கைப்பற்றினாலும் , அந்த நாட்டில் பாகிஸ்தான் நெருக்கடிகளைக் கொடுத்தே உள்ளது. மயிரிழையில் பெற்ற வெற்றியாகவே அமைந்துள் ளது. இந்த நிலையில் இந்தியா -பாகிஸ்தான் போட்டிகள் எதிர்வரும் காலங்களில் இடம்பெற உள்ளன. கிரிக்கெற் ரசிகர்களுக்கு நல்ல விருந்து ஒன்று. காத்திருக்கிறது.

- வெண்மதி

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sport

தெற்குத் திசையினிலே...

இந்திரஜித்

புதிய அரசியல் கூட்டணியும் புதிய அரசியல் குழப்பங்களும்

உலக வரலாற்றில் இடதுசாரிக் கட்சிக் கொள்கை, புதிய முறையில் நடைபெற்றுவந்த நாடுகளில்கூட ஊடுருவல்கள்மூலம் அந்தக் கட்சிகள் தகர்க்கப்பட்டு, முதலாளித்துவத்தின் மேலாதிக்கம் புகுத்தப்பட்டது. அதேநேரம், இடதுசாரிக் கொள்கைகளைக்கொண்ட அரசாங்கமும் சில அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டன.

இலங்கையில் தனிக்கட்சி, ஆட்சி முறைமையில் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தனிக்கட்சி ஆட்சி முறைமையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதன் காரணமாகவே, கூட்டுக்கட்சிகள் உருவாகப்படுகின்றன. இந்தக் கூட்டுக் கட்சிகளின் உருவாக்கம் என்பது பல கொள்கைகளைக் கொண்ட கட்சிகளின் ஒன்றிணைவு என அர்த்தப்படுகிறது.

உதாரணமாக - முதலாளித்துவக் கொள்கையைக் கொண்ட கட்சி ஒன்று, இடதுசாரிக் கொள்கையைக் கொண்ட கட்சி ஒன்றுடன் கூட்டுச்சேருமானால், அங்கு இரண்டு முரண்பட்ட கொள்கைகள் இணங்கிச்செல்லவேண்டியநிலை உருவாகிறது.

இது இணக்கம் என்ற அடிப்படையில் அல்லது மக்கள் நலன் என்ற அடிப்படையில் சிறந்த வழி என்றபோதும், அரசியல் பதவி மோகம் மாத்திரமே நோக்கம் என்ற நிலை வரும்போது, சிறந்த வழியாகக் கருதப்பட மாட்டாது.

இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ இன்று தனியாக நின்று, ஆட்சியமைக்க முடியாத நிலைக்கு வந்துள்ளன. இதற்குக் காரணம் - அந்தக் கட்சிகளின் வீழ்ச்சிநிலை மற்றும் மாற்றுக் கட்சிகள்மீது மக்கள் கொண்டுள்ள பற்று என்பவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

ஆளும்கட்சி சிலவேளைகளில் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும்போது, அதில் வெறுப்படையும் உறுப்பினர் ஒருவர் - கட்சி ஒன்றில் அங்கம் பெறுவது இயல்பு.

ஆனால், அந்த மாற்றுக்கட்சியானது குறிப்பிட்ட உறுப்பினரது உரிமையைப் பாதுகாக்கும் வலுவைக் கொண்டிருந்தால், அது அந்தக் கட்சிக்கு மேலும் மேலும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும். இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில், சிறந்த சில சேவைகளை ஆற்றிவந்தன.

அதன்போது, அரசாங்கத்துக்குப் பாரிய எதிர்ப்பைக் காட்டும் சக்திகளாக அவை விளங்கின. ஆயினும், காலவோட்டத்தில் இந்தக் கட்சிகளின் கொள்கைத் தேய்வுகள் மக்கள் மத்தியில் ஆதரவைக் குறையச் செய்தன.

உலக வரலாற்றில் இடதுசாரிக் கட்சிக் கொள்கை, புதிய முறையில் நடைபெற்றுவந்த நாடுகளில்கூட ஊடுருவல்கள்மூலம் அந்தக் கட்சிகள் தகர்க்கப்பட்டு, முதலாளித்துவத்தின் மேலாதிக்கம் புகுத்தப்பட்டது. அதேநேரம், இடதுசாரிக் கொள்கைகளைக்கொண்ட அரசாங்கமும் சில அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டன.

உலகத் தொழில்நுட்ப தொலைத்தொடர்பு வளர்ச்சிக்கு மத்தியில், அவற்றை இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட அரசாங்கத்தின் ஆட்சியின்கீழிருந்த மக்கள் இவற்றை அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. எனவே, அவர்கள் இடதுசாரி கொள்கையைக் கொண்ட நாடுகளைக் காட்டிலும், முதலாளித்துவக் கொள்கையைக் கொண்ட - திறந்த பொருளாதாரக் கொள்கையைக்கொண்ட நாடுகளின் ஆட்சியை விரும்பத் தொடங்கினர்.

இதன் காரணமாக, சோவியத் ஒன்றியம் போன்ற நாடுகள் - தமது கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சோவியத் ஒன்றியத்தில், மூடிய பொருளாதாரமாக இருந்தபோது, அந்த நாடு அமெரிக்க முதலாளித்துவ வல்லரசுக்கு சவால்விடும் நாடாக இருந்தது. ஆனால், தமது கொள்கை மாற்றத்தின் பின்னர் அந்த வலுவை அது இழந்தது. தற்சமயம் சீனா

தனது ஆட்சிமுறையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றபோதும், அங்கு பல முதலாளித்துவ ஊடுருவல்கள் ஏற்படுத்தப்பட்டே வருகின்றன.

சரி, இலங்கையின் வரலாற்றில் இந்த முதலாளித்துவக் கொள்கைகளும், இடதுசாரிக் கொள்கைகளும் மாறிமாறி ஆட்சிபீடத்தில் கடைப்பிடிக்கப்பட்டமையால், சுதந்திரத்திற்குப் பின்னரும் பொருளாதாரத்தில் தளம்பல்நிலை ஏற்பட்டது. இருந்தும் அந்தத் தளம்பல் தன்மையை நிலைநிறுத்த முடியவில்லை.

பிரித்தானியரால் நாடு இலங்கைப் பிரஜைகளிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், அவர்கள் விட்டுச்சென்ற பல கொள்கைகளே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இவையாவும் இலங்கையில் கட்சிகளின் அதிகரிப்புக்கே வழிவகுத்தன. ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர், அந்தக் கட்சியில் அதிருப்தியுறும் பிரிவு - மாற்றுக்கட்சி ஒன்றை நிறுவும். எனினும், குறிப்பிட்ட மாற்றுக் கட்சியும் முன்னர் தாம் அங்கம் வகித்த கட்சியின் கொள்கைகளையே பின்பற்றும். இது மக்கள் நலன் என்றில்லாமல், பிழைப்புவாதம் என்ற அம்சத்துக்குள் வரவேண்டிய ஒன்றாகும்.

கட்சி ஒன்றை ஆரம்பித்தால், அதன்மூலம் வாழ்க்கையைக் கொண்டுசெல்லலாம் என்ற நம்பிக்கை, கட்சித் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்டது. எனவே, கட்சிகள் வியாபார நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டன. கட்சி ஒன்றை ஆரம்பித்தால், அதன் உறுப்பினர்கள் அங்கத்துவ கட்டணங்களைச் செலுத்துவர். இந்த அங்கத்துவக் கட்டணங்கள் கட்சியின் நடவடிக்கைக்கு மேலதிகமாக மிஞ்சும்போது, அதனை வைத்துக்கொண்டு, தமது பிழைப்பை நடத்தும் நிலையை கட்சித் தலைவர்கள் மேற்கொள்வர். இது தற்சமயம் இலங்கையில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளாகும்.

மலையகத்தில் மாத்திரம் தற்சமயம் 10 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இவையாவும், தொழிற்சங்கங்களாக மட்டுமல்லாமல், அரசியல் கட்சிகளாகவும் செயற்பட்டு வருகின்றன அல்லது பெரிய கட்சிகளுக்கு வாக்காளர்களைச் சேர்த்துக்கொடுத்து, அவற்றைப் பதவியில் அமர்த்துவதன்மூலம், தமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளும் கட்சிகளாகச் செயற்பட்டு வருகின்றன.

சிங்கள மக்கள் மத்தியிலும் இவ்வாறான நிலை ஒன்றே காணப்படுகிறது. வடக்கு - கிழக்குக்கைப் பொறுத்தவரை, சிறுசிறு கட்சிகள் செல்வாக்கு இல்லாமல் இருந்தபோதும், பெரிய அரசியல் கட்சிகளும் தமது பேரம்பேசும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை.

இதன் காரணமாகவே, தமிழ் மக்கள் பேரம்பேசும் சக்தியாக உருவாகவேண்டும் என்ற அடிப்படையில், 'தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டது. இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர், வடக்கு - கிழக்குத் தமிழர்கள் மத்தியில் ஒரு புதிய உத்வேகம் ஏற்பட்டதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கட்சி முரண்பாடுகள் இருந்தாலும், பதவி முரண்பாடுகள் இருந்தாலும், இந்தக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகள் கடந்த 2 வருடங்களாக ஓரணியில் செயற்பட்டு வருவது போற்றக்கூடிய ஒன்றே. இந்தக் கூட்டமைப்பின் செயற்பாடு-சிங்களக் கட்சிகள் மத்தியிலும் பெரிதாகப் பேசப்பட்டது.

முஸ்லிம் கட்சிகளும் இதனை உதாரணமாக எடுத்து செயற்படத் தலைப்பட்டன. அதனடிப்படையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய வடக்கு - கிழக்கு முஸ்லிம் கட்சிகளும் ஒன்றித்துச் செயற்பட திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதும், இன்னமும் அதில் பாரிய முன்னேற்றம் காணப்படவில்லை என்றே கூறவேண்டும்.

எனினும், இலங்கையின் தென்புல அரசியலில் இரண்டாவது சக்தியாகக் கொள்ளப்படும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், மூன்றாவது சக்தியாகக் கொள்ளப்படும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து, ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளன.

பிரித்தானியரால் நாடு இலங்கைப் பிரஜைகளிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், அவர்கள் விட்டுச்சென்ற பல கொள்கைகளே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இவை யாவும் இலங்கையில் கட்சிகளின் அதிகரிப்புக்கே வழிவகுத்தன. ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர், அந்தக் கட்சியில் அதிருப்தியுறும் பிரிவு - மாற்றுக்கட்சி ஒன்றை நிறுவும். எனினும், குறிப்பிட்ட மாற்றுக் கட்சியும் முன்னர் தாம் அங்கம் வகித்த கட்சியின் கொள்கைகளையே பின்பற்றும். இது மக்கள் நலன் என்றில்லாமல், பிழைப்புவாதம் என்ற அம்சத்துக்குள் வரவேண்டிய ஒன்றாகும்.

இந்தக் கூட்டமைப்பு 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நிகழ்ந்தது. இந்த நிகழ்வு - நாட்டுக்கு நன்மை பயக்கப் போகிறதா அல்லது தீமை பயக்கப்போகிறதா என்பவையாவும் ஒருபுறமிருக்க, இரண்டு முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் கூட்டிணைவை ஏற்படுத்தியிருப்பது ஒரு சாதனைதான்.

அந்தச் சாதனை எதிர்பார்க்கப்படும். தேர்தல் வயல் ஒன்றில், வாக்கு அறுவடைக்கு மாத்திரமே பயன்படும் எனக் கருத்துக்கள் எழுந்துள்ளன.

நாட்டில் இன்று அவசியமானதெனக் கருதப்படுகின்ற இனப்பிரச்சினைத் தீர்வுக்கு, இந்தக் கூட்டமைப்பால் எதனைச் சாதிக்கமுடியும் என்ற கேள்வி தொக்கிநிற்கும் நிலையிலேயே, கூட்டமைப்புக்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது.

தற்சமயம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கங்கள் யாவும், உண்மையில் இந்தக் கூட்டமைப்பினால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுப்பது கடினமானதாகவே இருக்கும்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி கூறுவதைப்போல, செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் காட்டிலும், இரகசிய ஒப்பந்தம் ஒன்று இரண்டு கட்சிகளுக்கிடையில் இருப்பது உண்மையானால், அதில் சற்றுச் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணாமல் - எந்த ஒரு கட்சியும், கூட்டமைப்பும் உயிர்வாழமுடியாது. எனவே, அதனை இந்த இரண்டு கட்சிகளும் உணர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, முன்னர் கூறப்பட்டவைபோல, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஜனாதிபதி 2000 ஆம் ஆண்டு முன்வைத்த பரிந்துரையை, மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே, இந்தக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது என்றால், அது நீண்டகாலத்துக்கு உயிர்வாழும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும், மக்கள் விடுதலை முன்னணியினர் இதுவரை மக்கள் முன்னால் பரப்பி வந்த கருத்துக்கள் யாவற்றையும் மாற்றிக்கொள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

முன்னர் இனவாதியாக மாத்திரமே செயற்பட்டதாக - தமிழ், முஸ்லிம் மக்களால் நோக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியினர்-அண்மைக்காலமாகப் பௌத்த அடிப்படைவாதிகளாகவும் செயற்பட ஆரம்பித்தனர்.

இது அவர்களுக்கு பௌத்த சிங்களவர் மத்தியில், தேர்தல் ஒன்றில் வாக்குகளை வெற்றிகொள்ள வழிவகுக்கும். எனினும், தேசிய அரசியலில் நீண்டகால நோக்கத்தில் அதனால் நின்றுபிடிக்க முடியாது.

ஜனாதிபதி கூட்டமைப்புத் தொடர்பாக



ஆரம்பம் முதல் பெரிதும் அக்கறை காட்டாதபோதும், பின்னர் இந்தக் காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கம் ஒன்றை எட்டமுடியாத காரணத்தினால், இந்தக் கூட்டமைப்புக்குள் தள்ளப்பட்டார் என்பதே உண்மை.

எனவேதான் எந்த ஒரு விடயத்திலும் சகுனங்களை, சாத்திரங்களைப் பார்க்கும் ஜனாதிபதி - இந்த விடயத்தில் அவ்வாறான நம்பிக்கைகளைக் கைக்கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. இங்கு ஒன்றைக் குறிப்பிட்டேயாகவேண்டும்.

கடந்த 20 வருடகால யுத்தகாலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது, ஏதாவது புதியதொரு தாக்குதலை ஆரம்பிக்கின்றபோதெல்லாம், சிங்களத் தலைமைகள் இந்தியாவுக்குச் சென்று 'நல்லநேரம்' பார்க்கும் விடயங்களில் ஈடுபட்டு வந்தன. சிங்கள அரசியல் தலைமைகள் மட்டுமல்லாமல், இராணுவதுறையைச் சார்ந்தோரும் இதில் உள்ளடங்குவர்.

ஜனாதிபதி - மக்கள் விடுதலை முன்னணியுடன் தமது கட்சி உறுப்பினர்களின் வலியுறுத்தல்களால், ஒரு கூட்டிணைவுக்கு ஒத்துவந்தார் என்பது அனைவரும் அறிந்ததே.

இதன் ஒரு கட்டமே, இன்னமும் மலிக் சமரவிக்கிரம - மனோ தித்தவெல குழுவின் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி நடத்த அனுமதித்துள்ளமையாகும்.

பழைய தகவல் என்றாலும்கூட - புதிய தோற்றப்படி இந்தியா, இலங்கையின் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தி வருவதற்கான நடுநிலைமையை ஏற்றுக்கொண்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தெற்காசிய ஒத்துழைப்பு மாநாட்டின்போது, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் - இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர் எனக் கூறப்படுகிறது.

அதேநேரம், நேற்றுமுன்தினம் பிரதமரின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறகொட - இந்தியாவுக்குச் சென்றுள்ளமையும் இந்த இணக்க முயற்சியின் ஒருகட்டமே என நம்பப்படும்.

இறுதியாக ஒன்றைக் கூறவேண்டும். ஜனாதிபதியும், பிரதமரும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் ஒன்றுபடாதபோதும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இணைந்தே செயற்படுகின்றனர்.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட இருப்பதாகவும், அதற்காக ஜனாதிபதி தமது சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை இந்தியாவுக்கு அனுப்பியதும் பிரதமர் தமது சார்பில் மிலிந்த மொறகொடவை இந்தியாவுக்கு அனுப்பியதும் இதற்கு உதாரணங்களாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

பாத்திரம் அறிந்து பிச்சை போடு

தமிழ்ப்பழமொழி

நமது நோக்கு

கடன் வழங்கும் நாடுகளின் கவனத்திற்கு...

இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டு மீளாய்வுக் கூட்டம், நேற்று முன்தினம் ஆரம்பமானபோது அதில் பத்திற்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகளும், சர்வதேச நாணயநிதியம், மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அதில் பங்கேற்க ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி அதற்குத் தலைமை தாங்கியுள்ளார்.

ஏற்கனவே கடந்த ஆண்டு யூன் மாதத்தில் ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டில், என்றும் இல்லாத வகையில், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு வழங்கும் ஆதரவின் வெளிப்பாடாகவும், இலங்கையின் அபிவிருத்தியின் மீதான ஆழ்ந்த அக்கறையின் வெளிப்பாடகவும், நன்கொடையாகவும், நீண்டகால கடனுதவியாகவும் சுமார் 450 கோடி டொலர்களை வழங்க உறுதிவழங்கப்பட்டபோது, அதனை ரணில் தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசாங்கம், தங்களின் அமைதி முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாக பிரசாரம் செய்து பெருமைப்பட்டுக் கொண்டது நினைவிருக்கலாம்.

அந்த 450 கோடி டொலர் உதவியானது, சமாதான முன்னெடுப்பின் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு, மூன்றாண்டுகளில் பகுதி பகுதியாக வழங்கப்படும் என்றும் அந்த உச்சிமாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் பார்த்தால், இந்தக் கடனுதவியானது சமாதானத்தை வலியுறுத்தி அதனை நிபந்தனையாக்கியே வழங்க அந்த உச்சிமாநாட்டில் கலந்த கொண்ட நாடுகள் முடிவெடுத்தன என்பது தர்க்கரீதியில் சரியானதும், நியாயமானதுமாகவே இருந்தது.

யுத்தம் தொடரும், அல்லது சமாதானம் உறுதிப்படுத்தப படாத ஒரு நாட்டுக்கு நிதியுதவி செய்வதானது, அபிவிருத்தியை நோக்கமாக கொண்டது என எவராலும் கூறமுடியாது.

அது மென்மேலும் அதிகார வெறிமிக்க அரசுகளால் அழிவு நடவடிக்கைகளுக்கும், சுய அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற்குமே பயன்படுத்தப்படும் என்பதுடன், தேசவளர்சிக்கோ, மக்களின் வாழ்வியல் உயர்வுகளுக்கோ அது எந்த வகையிலும் பயன்படாமல் போகும் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த இருதசாப்தத்திற்கும் அதிகமான காலம் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராக, சிங்கள் இனவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நியாயமற்றதும், கொடூரமானதுமான யுத்தத்தின் முன்னெடுப்புக்கே, நாட்டின் மனிதவளம் உட்பட சகல வளங்களையும் பயன்படுத்தியதுடன் வெளிநாட்டுக்கடன் உதவிகளையும் இராணுவ வளத்தையும், பலத்தையும் பெருக்குவதற்கே பயன்படுத்தி வந்தது என்பதில் ஐயமில்லை.

வெளிநாட்டுக் கடன் உதவிகள் ஒரு போதுமே யுத்தத்திற்கு என்று வகைப்படுத்தி வழங்கப்படுவது கிடையாது.

இராணுவ உதவிகள், பாதுகாப்புச் சம்மந்தப்பட்ட பரஸ்பர ஒத்துழைப்பு அல்லது ஒன்றிணைந்த செயற்பாடு என்ற பெயரில் வழங்கப்பட்டாலும், அபிவிருத்திக்கு என வழங்கப்படும் பெருமளவிலான கடன் நிதியையும், இலங்கை போர்ச் செலவுகளுக்கு என கொண்டுபோய் கொட்டியதை சர்வதேச சமூகம் உணர்ந்தே இருந்திருக்கும் என்பது தெளிவு.

எனவே, இம்முறை வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட 450 கோடி அமெரிக்க டொலர்களையும், சமாதானத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்கு என்றே சர்வதேச சமூகம் அதாவது, உதவிவழங்கும் நாடுகளும், அமைப்புக்களும், ஏனைய நிறுவனங்களும் தீர்மானித்தமைக்கும் அதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான் இந்த உதவிகள் குறித்த கலந்துரையாடல் மாநாடுகளில் விடுதலைப்புலிகளையும் பங்கேற்குமாறு ஜப்பான் வலியுறுத்தியது என்று கருதவும் இடமுண்டு.

ஆனால், உறுதியற்ற கொள்கையுடைய, ஸ்திரமும் அதிகாரமும் அற்ற அரசுடைய அரசியல் குழப்பங்களைக் கொண்ட இலங்கையின் இன்றைய சூழலை, நன்கு புரிந்து கொண்டுள்ள சர்வதேச சமூகம் இலங்கைக்கான கடனுதவிகள் தொடர்பாக சுயமாகவே என்ன முடிவுகளை எடுக்கவேண்டும் என அவர்களே தீர்மானிக்க முடியும் என்பதால், அதில் விடுதலைப் புலிகள் தாம் கலந்துகொள்ள வேண்டியதில்லை என முடிவு எடுத்ததும் நியாயமே.

இந்த நிலையில், இந்தக் கடனுதவி மீளாய்வு மாநாட்டில், மாநாட்டுக்கு தலைமை வகித்த ஜப்பான் விசேட தூதர் அகாஷி, சமாதானத்தை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்த ஜே.வி.பியுடன், ஜனாதிபதி கூட்டணி அமைத்துக் கொண்டிருப்பதால் அரசியலில் கூச்சமும், குழப்பமும் அதிகரித்துள்ளது. இது நல்ல சமிக்ஞை அல்ல, இந்த நிலை தொடருமானால் இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட கடன்களை - ஏனைய நிதியுதவிகளை வழங்குவதில் தடங்கல் ஏற்படவே செய்யும். எனக் கூறியிருப்பதானது இலங்கையின் சமாதானம் தொடர்பான ஆட்சியாளர்களின் ஸ்திரமற்ற கொள்கையினை அவர் மட்டுமல்ல, சர்வதேச உதவிவழங்கும் ஏனைய நாடுகளும், அமைப்புக்களும் புரிந்து கொண்டுள்ளமையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சமாதானத்தின் பெயரால், அபிவிருத்திக்கு என வழங்க உறுயளிக்கப்பட்ட கடன்நிதியுதவிகளை, உறுதியற்றதும் குழப்பம் மிக்கதுமான ஆட்சியாளர்களுக்கு வழங்குவது, எதிர்பார்க்கும் நன்நோக்கங்களை எட்ட வழிவகுக்காது என்பது சர்வநிச்சயமாகும்.

நாடும் நடப்பும்



ஒவ்வொருவரும் அமைதியை வரவழைத்தால் உலகம் முழுவதும் அமைதி நிலவும்

பிரம்மகுமாரி மீரா நாகானந்தா தெரிவிப்பு

ஒவ்வொருவரும் தமக்குள்ளே அமைதியை வரவழைத்துக் கொள்வர் எனின் உலகம் முழுவதும் அமைதி தானாக நிலவும் என பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தைச் சேர்ந்த சகோதரி மீரா நாகானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சமாதானத்தை வலுப்படுத்தல் எனும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ,அவர் இதனைத் தெரிவித்தார். நேற்றுக் காலை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன், சகோதரி மீரா நாகானந்தா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வரவேற்புரையைத் தொடர்ந்து, வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனையடுத்து, சகோதரி மீரா நாகானந்தனின் அமைதி வாழ்வு பற்றிய உரை இடம்பெற்றது. ஆங்கிலத்தில் ஆற்றப்பட்ட இவ்வுரை சமகாலத்திலே தமிழிலும் மொழிபெயர்ப்புச் செய்யப் பட்டது.

இவர் தனது உரையில், இன்றைய உலகம் விஞ்ஞான தொழில்நுட்பங்கள் நிறைந்ததொன்றாக மாறிவருகிறது. ஆனால், அமைதி என்பது இன்று சீர்குலைந்து தொலைந்து போய் உள்ளது. நாம் எல்லோரும் அமைதியாக வாழவே ஆசைப்படுகிறோம். ஆனால், அந்த அமைதிக்கான வழியைத் தேட முடியாது அவதிப்படுகின்றோம்.

ஒரு சிறு குழுவினரால் உலகில் அமைதியை கொண்டு வருவதென்பது முடியாத காரியமல்ல. உள்ளத் தூய்மையோடு முயன்றால் அது சாத்தியமாகும். அமைதி என்பது பல்வேறு தரப்பினரும் பல்வேறு விளக்கங்களை கொடுப்பார்கள். ஒரு குழந்தை அமைதி என்பதற்கு ஒரு விதமான விளக்கம் கொடுக்கும்.

ஒரு அரசியல்வாதி யுத்தமற்ற சூழலே அமைதியென விளக்கம் கொடுப்பார். இவ்வாறு அமைதிக்கான விளக்கங்கள் வேறுபட்டாலும் அமைதி என்பது மிகவும் பெறுமதி வாய்ந்த தொன்றாகவேயுள்ளது. மற்றவர்களை அன்போடு நாம் ஒவ்வொருவரும் நேசிப்போமாக இருந்தால் உலகில் இலகுவாக அமைதியான நிலையை கொண்டுவர முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

போர் நிறுத்த உடன்பாட்டை பாதுகாக்க அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும்

பிரதமர் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாட்டை பாதுகாப்பதற்கு அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் என பிரதமமந்திரி கோரியுள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றும் போதே, பிரதமர் நாட்டுமக்களிடம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

போர்நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் நாட்டில் பல்வேறு அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் இருந்த போர் தொடர்பான பயம் முதலியன நீக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில், தற்போது நிலவும் அரசியல் முறுகல் அதற்குப் பாதகமாக அமைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இதனைத் தெளிவுபடுத்துமுகமாக போர்நிறுத்த உடன்பாடடைக கட்டிக்காப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும் என்று பிரதமர் கேட்டுள்ளார்.

நாட்டில் முதலீடுகள் குறைந்து வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டு நாடு கஷ்டமான நிலைக்கு சென்று கொண்டிருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (01)

கொழும்பு பிரதான நீதிவான்

போயகொடவை பதவியிலிருந்து விலக்க நீதிச்சேவை ஆணைக்குழு முடிவு

கொழும்பு பிரதான நீதிவானாகச் செயற்பட்டுவந்த ரி.சி போயகொடவை பதவியிலிருந்து நீக்கிவிட நீதிச்சேவை ஆணைக் குழு முடிவு செய்துள்ளது.

இவருக்குப் பதிலாக கொழும்பு பிரதான நீதிவானாக மாலிககந்த நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன நியமனம் பெற்றுள்ளார். இவர் திங்கட்கிழமை முதல் பணியை ஏற்கவுள்ளார்.

திலங்க சுமதிபாலவின் கொலை வழக்குடன் தொடர்புடைய போய கொடாவின் தகைமைக்கள் குறித்தும், அந்த வழக்கில் அவர் நடநது கொண்ட விதம் குறித்தும் நீதிச்சேவை ஆணைக்குழு விசாரணை நடத்தியது.

இதனை அடுத்தே, போயகொடவைப் பதவியில் இருந்து விலக்குவதென நீதிசசேவை ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது.

திலங்க சுமதிபாலவின் வழக்கை தம்மால் எடுத்துக் கொள்ளமுடியாது வேறோரு நீதிவானை இந்த வழக்கு தொடர்பாக நியமிக்க வேண்டும் என போயகொட கூறியிருந்தமை காரணமாகவே இவர் பதவி விலக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

எந்தக் கட்சியுடனும் கூட்டணியை அஷ்ரப் காங்கிரஸ் வைக்கவில்லை!

அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தக் கட்சியுடனும் தற்போது கூட்டு வைத்துக் கொள்ளவில்லை என அஷ்ரப் காங்கிரஸ் கட்சியின் தேசிய தவிசாளரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஏ.எல்.எம் அதாவுல்லா தெரிவித்தார்.

இன்றைய நிலையில், அஷ்ரப் காங்கிரஸ் - ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு வைத்துக்கொள்வது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகின்றன. இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் அவ்வாறான பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் சில வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்களை தெரிவித்த அதாவுல்லா முஸ்லிம் கட்சிகளுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய கொள்கை ரீதியான இணக்கத்துக்குவரும் அரசாங்கத்துக்கே தாம் ஆதரவினை வழங்கப்போவதாக கூறியுள்ளார்.

முஸ்லிம் சமூகம் மோசமாக வஞ்சிக்கப்பட்டபோது, அமைச்சுப்பொறுப்புக்களையும், நாடாளுமன்ற நிலைகளையும் விட்டு விலகிய தமக்கு மக்கள் மத்தியில் நிலவும் சக்தியை கெடுக்கும் முகமாகவே வீணான வதந்திகள் பரப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (01)

செய்திக் கட்டுரை

- செந்தணன்

விவசாயிகள் நலன் காக்கும் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம்

இன்றைய உலக இயக்கத்தில் மனிதனது செயற்பாட்டிற்கும், அவனது உயிர் வாழ்க்கைக்கும் அவசியமான, அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றாக விளங்குவது உணவு. அந்த உணவை உற்பத்திசெய்து தருவதில் முக்கிய பங்காற்றுபவன் விவசாயி. அவன் நலனைக் காப்பதனூடாகத்தான் விவசாயத்தையும் உணவு உற்பத்தியையும் அதிகரிக்கமுடியும்.

உலகளாவியரீதியில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு நிகராக விவசாய உற்பத்தியும் வளர்ச்சியடைந்து வருகின்றது. அதேபோல் உலகில் விவசாயிகளுக்கும் தனித்துவமானதொரு இடம் வழங்கப்பட்டு வருகின்றது. இதேபோல், எமது நாட்டிலும் உழவர்களுக்குத் தனியான மதிப்பும், மரியாதையும் உண்டு.

தைப்பொங்கலை இனிதே கொண்டாடி விட்டு, பொங்கலை உண்ட மகிழ்வில் இருக்கும் நம்மவர்களுக்கு இந்தவிடயம் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டிய தேவையில்லை.

விவசாயிகள் நலன்பேணும் விடயங்கள்- உலகில் எல்லா நாடுகளிலும், பல்வேறு வகையான திட்டங்களாகப் பேணப்பட்டு வருகின்றன.

இந்த நாடுகளுடன் ஒப்பிடுமளவிற்கு இல்லாவிட்டாலும், ஒருசில நல்ல திட்டங்கள் விவசாயிகளின் நலன்பேணும் வகையில் உள்ளன.

அவைபற்றிய போதிய விளக்கம் இன்மையால் - மக்கள் அவற்றைப் பெறமுடியாது போய்விடுகின்றது. இங்கு நான் குறிப்பிடவருவது - கமநல சேவை திணைக்களத்தின் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றிய விடயமாகும்.

ஏனைய திட்டங்களுடன் ஒப்பிடுகையில் விவசாயிகளுக்கு ஓரளவிற்குப் பயனளிக்கக் கூடிய திட்டமாகவே இது அமைகின்றது. இந்தத் திட்டத்தை சரியாக விளங்கிக் கொண்டு, மக்கள் யாழ்.கமநலச் சேவைத் திணைக்களத்தை அணுகுவதனூடாக இந்த நன்மையை அடையமுடியும்.

மிகமுக்கியமாக - 18 வயது முதல் 59 வயது வரையான விவசாயிகள் இந்த ஓய்வூதியத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். இவர்களின் வயதெல்லைக்கேற்ப அவர்களது கட்டுப்பணம் அமையும்.

ஒரு விவசாயி - ஒரே தடவையில் ரூபா ஆறாயிரம் வரையிலான தனது கட்டுப்பணத்தைச் செலுத்தமுடியும். அதனைத் தவணை அடிப்படையிலும் செலுத்தமுடியும். எது எப்படியாயினும், உரிய பணம் முழுமையாகச் செலுத்தப்பட்டால், ஒரு விவசாயி தனது 60 ஆவது வயதைப் பூர்த்திசெய்து கொண்டதும் - மாதம் தோறும் தனக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை அவர் தொடர்ந்து வாழும் காலம் முழுவதும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதில் இன்னுமோர் சிறப்பம்சம் யாதெனில் - அவ்வாறு ஓய்வூதியம் பெறும் ஒருவர் இறந்தால், அவருடைய மனைவிக்கு அந்த ஓய்வூதியம் தொடர்ந்தும் வழங்கப்படும். இது அவர் உயிர்வாழும் காலப்பகுதி முழுவதும் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயி ஒருவர் சேர்ந்து கொண்ட பின் - அவருக்கு எதிர் பாராதவிதமாக ஏற்படக்கூடிய இழப்புக்கள், உடலியல்ரீதியில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் முதலானவற்றிற்கும் நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படுகின்றன. மேலும் அவர் தனது பெயரை இந்தத்திட்டத்தில் பதிந்து கொண்டபின் மரணம் சம்பவித்தால், உடனடியாக அவரது குடும்பத்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வரையிலான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும். தற்போது யாழ்.மாவட்டத்தில் 60 வயதைத்தாண்டிய நிலையில் 481 பேர்வரை விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தினைப் பெற்றுவருகின்றனர்.

தற்போது இந்த ஓய்வூதியத்திட்டத்தின கீழ் - மாதம் ஆயிரம் ரூபாவரை வழங்கப்படுகின்றது. இது கால ஓட்டத்தில் அதிகரிக்கப்படச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இங்கு கவலைக்குரிய விடயமாகக் குறிப்பிடக்கூடியது என்னவெனில், யாழ்.மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் வாழ்ந்துவருகின்ற போதிலும் - ஆக 7 ஆயிரத்து 653 பேர்வரையே இந்த ஓய்வூதியத்திட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற அனர்த்தங்களாலும், வேறு சில தனிப்பட்ட காரணங்களாலும் இந்தத்திட்டத்தில் இருந்து தமது பெயரைத்துண்டித்துக் கொண்டவர்களுக்கு - யாழ்.மாவட்ட கமநலத்திணைக்களம் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிவரை காலக்கெடு வழங்கியுள்ளது. இதனை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்தத் திட்டத்தின்கீழ் இணைந்துகொண்டவர் ஒருவர் இறக்க நேரிட்டால் - அவரது துணை (ஆணோ, பெண்ணோ) அந்தத் திட்டத்தில் தமது பெயரைத் தொடர்ந்து பதிந்துபேணவும், அந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

விவசாயிகளுக்கான பல கடன்திட்டங்கள் மற்றும் நலன்பேண் திட்டங்களையும் கமநலசேவைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இத் திணைக்களத்தில் பணியாற்றும் இவை பற்றிய தெளிவான விளக்க மற்ற சில உத்தியோகத்தர்களிடம் எந்தவொரு விடயத்தைக் கேட்டாலும், உதவி ஆணையாளருக்கே அது பற்றித் தெரியும் எனக் கூறிக்கொள்வதனூடாக தமது கடமையிலிருந்து நழுவிவிடுகின்றனர்.

தற்போதைய யாழ்.மாவட்ட கமநலசேவைத திணைக்களத்தின் உதவி ஆணையாளரும் கொழும்பில் வசிப்பவராதலால் - அவரிடம் இந்தத் திணைக்களம் தொடர்பான தகவல்களைத் தேவைப்படும் வேளைகளில் உடனடியாகப் பொதுமக்களோ, பத்திரிகையாளர்களோ பெறமுடியாத நிலையிலுள்ளமை ஓர் குறைபாடு என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ☆

செய்திக் கட்டுரை

- காவலூர் விஜேந்திரன்

வசதிகளும் கவனிப்பும் வழிகாட்டலுமின்றி புறமொதுங்கிக் கிடக்கும் இரு கிராமங்களின் குரல்கள்

உதவி நிறுவனங்களும் உல்லாச விடுதிகளும் நகரை அலங்கரிக்கின்றனவே தவிர, நகரை அண்டிய கிராமங்களைக் கவனிப்பதில்லை இதற்கு உரியவர்கள் என்ன காரணத்தை முன்வைக்கிறார்கள்? இந்த இரு கிராமங்களும் எப்பொழுது புதுப்பொலிவுடன் ஒளிபெறும் என்பது இந்தக் கிராம மக்களினது ஏக்கம் மட்டுமன்றி எதிர்பார்ப்பும்கூட...

நாவற்குழி உப்பளம், அதனை அண்மித்த வயல்களில் - கூலிவேலை செய்யும் நோக்கில், கல்வியங்காட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இரு குடியேற்றத் திட்டங்கள் பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் J/257 கிராம சேவையாளரின் கீழுள்ள இரு கிராமங்களில் கிணறு, மலகூடம், வீதிகள், வேயப்படாத குடிசைகள் என, அடிப்படை வசதிகளின்றி இடப்பெயர்வுகளை சந்தித்தவர்களான மக்கள் வாழ்கின்றனர்.

புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள ஞானவைரவர் கோவிலடிக் கிராமம், ஆனந்தபுரம் கிராமம் ஆகிய இரண்டும் - 215 குடும்பங்களை உள்ளடக்கியதாகும். இந்தக் கிராமங்களில் உள்ளவர்களில் அனேகமானவர்கள் கூலித்தொழிலாளர்களாவர்.

கடந்த 55 வருடங்களாக ஞானவைரவர் கோவிலடி கிராமத்தில் வசித்துவரும் **தீரவியம் நடராஜா** என்ற கூலி வேலைசெய்து வரும் பெண் தனது அனுபவத்தைக் கூறுகிறார்.

எனக்கு மூன்று பிள்ளைகள். கணவன் இல்லை. கூலிவேலை செய்தே நாம் வாழ்ந்து வருகின்றோம். எனது வளவிற்கு வருவதற்குப் பாதையில்லை. கிணறு இல்லை. மலசல கூடம் இல்லை. குடிப்பதற்கென தண்ணீர் எடுப்பதென்றால், முத்துமாரி அம்மன் கோவில் கிணற்றிற்குத்தான் போகவேண்டும். வைத்தியத்தேவைக்குக் கோப்பாய் ஆஸ்பத்திரிக்குப்போவோம். அதற்குமேலே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத்தான் போகவேண்டும். இங்குள்ளவர்களிடம் ஒற்றுமை இல்லை. ஒற்றுமை இருந்தால் காணிகளுக்கான பாதைகளை மட்டுமாவது அமைத்திருக்கலாம்.

"இராணுவ நடவடிக்கைகளால் இருமுறை இடம்பெயர்ந்துள்ளோம். இந்த இடப்பெயர்வுகளால் குடிசைகள் சேதமாக்கப்பட்டதுடன், பொருட்களையும் இழந்துள்ளேன். எமக்கு அடிப்படை வசதிகளையாவது உரிய அமைப்புக்கள் தந்துதவினால் நல்லது." - இவ்வாறு பெருமூச்சுவிடுகிறார் திரவியம்.

75 குடும்பங்களை உள்ளடக்கிய ஞானவைரவர் கோவிலடிக் கிராமத்தில் ஞான ஒளி முன்பள்ளி இயங்கிவருகின்றது. இதில் 15 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். எதுவித வசதிகளும் இன்றி தனியே கட்டடத்தை மட்டும் வைத்து பாலசிங்கம் விமல ரூபா எனும் ஆசிரியர் முன்பள்ளியை நடத்தி வருகிறார்.

விமலாதேவி என்பவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் -

"பள்ளிக்கூடம் தரம் 5 வரையே பக்கத்தில் உள்ளது. இதற்குமேல் என்றால் வேறிடங்களுக்குத்தான் போகவேண்டும். அடிப்படை வசதிகள் இல்லை. ஒரு சங்கக்கடையாவது எமது கிராமத்தில் அமையவேண்டும். ஒரு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள கடையில் இருந்தே நிவாரணப் பொருட்கள் பெற்றுவருகின்றோம்.

"எமக்கென இரு தடவைகள் வீட்டுத்திட்டம் வந்துதிரும்பியுள்ளது. உரியவர்களின் அசமந்தப் போக்கே அதற்குக் காரணம். நியாப் நிறுவனத்தினர் பல உதவிகளைச் செய்வதற்காக விபரங்களைத் திரட்டிச் சென்றார்கள். இதுவரை எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை. எமது கிராமத்தை அண்டிய பகுதிகளில் மண் அகழ்வும் இடம்பெற்று வருகிறது. இதனால், கடல்நீர் உட்புகுவதனால் - இங்குள்ள ஒரு சில கிணறுகளும் உவர்நீராக மாற்றமடைகிறது." இவ்வாறு குறிப்பிடுகிறார் விமலா தேவி.

ஆனந்தபுரம் கிராமத்தில் 140 குடும்பங்கள் உள்ளன. இவர்களில் பெருமளவானோர் கூலித்தொழிலாளர்களாகவே உள்ளனர். இந்தக் கிராமத்தில் 4 மலசலகூடங்கள் உரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன. 9 கிணறுகள் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டாலும், குடிதண்ணீர் முத்துமாரி அம்மன் கோவிலிலேயே எடுக்கவேண்டும்.

இங்கு இரு ஆசிரியர்களால் ஒரு முன்பள்ளி செயற்பட்டு வருகிறது. இதில் 37 மாணவர்கள் கல்விகற்கிறார்கள். இவற்றுடன் மாலைநேரக் கல்வியும் வெளி இடங்களில் இருந்து வருபவர்களால் நடத்தப்படுகிறது.

இருபாலை தெற்கு மாதர் சங்கத் தலைவி **நவரெட்ணம் - அருந்தவமலர்** தமது கிராமத்தைப் பற்றிக் கூறுகையில் -

"இங்கே கூலிவேலை செய்பவர்கள்தான் அனேகமாகவுள்ளனர். இவர்களது நாட்கூலி 250 ரூபா. இதனைக்கொண்டு எவ்வாறு ஒரு குடும்பத்தேவைகளை நிறைவுசெய்யலாம்? இந்தத் தொகை அவர்களது உணவுத் தேவைகளுடன் முடிவடைவதனால், வேறு செயற்பாடுகளைத் தமக்கெனச் செய்யமுடியாதவர்களாகவுள்ளனர். ஆண்டுத் தொடக்கத்தில் பாடசாலை உபகரணங்கள் வாங்கவேண்டும். இதற்கென மேலதிகமாகத் தேவைப்படும் பணம் இன்மையால், பல மாணவர்கள் பாடசாலைக்குப் போகமுடியாதுள்ளனர்.

"எமது கிராம எல்லையுடன் மின்சாரம் முடிவடைகிறது, எமது பகுதிக்கும் மின் இணைப்பை வழங்கலாம்தானே. குப்பி விளக்குகளிலேயே இரவுகளைச் செலவழிக்கிறோம்" எனத் தெரிவிக்கிறார் அருந்தவமலர்.

உழவு இயந்திர சாரதியான **தவராசா** கிராமத்தைப் பற்றிக் கூறுகையில் - இங்கு தண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவுள்ளது. இங்கு குடியிருப்பவர்களில் சிலர், வெளிநாட்டு வசதிகளையும் வேறு காரணங்களையும் முன்வைத்து வெளி இடங்களுக்கு இடம்மாறுகிறார்கள். இவ்வாறு வசதியானவர்கள் வெளியேறி வருவதனால், வசதியற்றவர்களே தொடர்ந்தும் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றார்கள். இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்திலும், பின்பு 1995 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்கள் எமது கிராமத்தவர்கள் என்றே சொல்லவேண்டும். இவ்வாறு தெரிவிக்கின்றார் தவராசா.

கிராமிய சுகாதாரத் தொண்டராகக் கடமையாற்றும் **சண்முகலிங்கம் ஜெனா** கூறுகையில் -

எமது பாடசாலைக் காலங்களில் பெரும் அவலங்களைச் சந்தித்தோம். மழை காலங்களில் எமது ஒழுங்கையால் போகமுடியாது. மின்சாரம் வழங்குவதில்கூட எம்மைப் புறக்கணிக்கிறார்கள். அரச அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஏன் வருவோர் தொகை அதிகமே தவிர, உதவுவோர் இல்லை. தேர்தல் காலங்களில் அழையா விருந்தாளிகளாக வரும் அரசியல்வாதிகள் - தமது நோக்கங்கள் நிறைவேறியதும் எமது தேவைகளை மறந்துவிடுகிறார்கள்..." இவ்வாறு தனது ஆதங்கத்தை தெரிவித்தார் ஜெனா .

யாழ்ப்பாணம் - பல சிற்றூர்களைத் தன்னகத்தேகொண்டு, தனக்கெனத் தனி இடத்தைச் சகலதுறைகளிலும் தக்கவைத்துள்ளது. ஆனால், யாழ்ப்பாணத்தில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் இந்த இரு கிராமங்களும் இருளில் மூழ்கியுள்ளன. இவற்றை உரியவர்கள் ஏன் இனங்கண்டு கொள்ளவில்லை. இந்தக்கிராம மக்களையும் முன்னே கொண்டுவராமைக்கு என்ன காரணம்?

தாழ்த்தப்பட்டு, ஒதுக்கப்படுகிறார்கள். இந்தக் கிராமத்தில் ஓரளவு வசதி படைத்தவர்கள் தமது காணிகளை விட்டு, வெளி இடங்களில் - வாடகைக்கும் சொந்தமாகவும் வீடுகள் எடுத்து இடம்மாறுகிறார்கள். இப்படியே இந்த நிலைதொடர்ந்தால், இந்தப் பெயர்களில் இருகிராமங்கள் இருந்தனவா என்ற கேள்வி எழுவதற்கு நீண்டகாலம் எடுக்காது.

இந்தக் கிராம மக்களிற்குப் புதிய செம்மணிவீதியை புனரமைத்து, மின்சார வசதிகளையும் ஏற்படுத்தி, குடிசைகளைப் புனரமைத்து, கிணறு மற்றும் மலசலகூடங்களையும் உரிய அமைப்புக்கள் அமைத்துக் கொடுக்கவேண்டும்.

இந்த மக்களிடையே விழிப்புணர்வு இல்லை. இங்கு கலாசார சீரழிவுகள் இடம் பெறுகின்றது. போதிய வழிகாட்டல் இன்மையால் இளம் சமூகம் திசைமாறிச் செல்கிறது. பெருமளவானோர் பாடசாலைக்குச் செல்வதில்லை. காலம் காலமாக இவை தொடர்ந்த வண்ணமுள்ளன. இந்தநிலை எப்போது மாற்றடையும்?

நீண்டகாலமாக எதுவித சலுகைகளையும் பெறாது, வசதிவாய்ப்புக்கள் இன்றி வாழும் இந்தக்கிராம மக்களிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, பிறரில் தங்கிவாழும் நிலையில் இருந்து அகற்றி, சுயமாகச் செயற்படக்கூடிய வகையில் ஒழுங்குகளை மேற்கொண்டு இந்தக்கிராமங்களையும் முன்னேற்றவேண்டும். ☆

ஆயுதம் தரியாத இரு பலஸ்தீனியர்கள் இஸ்ரேலியப் படையின் சூட்டுக்குப் பலி!

தேடுதல்கள் தீவிரம்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலிலிருந்து காஸாப் பகுதியைப் பிரிக்கும் எல்லையில் இஸ்ரேலியப் படையினரால் இரு பலஸ்தீனியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்

கொல்லப்பட்டுள்ள இரு பலஸ்தீனியர்களும் சம்பவம் நடைபெற்ற நேரத்தில், துப்பாக்கிகள் எவற்றையும் தம்வசம் வைத்திருக்கவில்லையெனவும், தொலைநோக்கு கருவிகளும், கைதொலைபேசியும் வைத்திருந்ததாகவும், இவற்றின் மூலம் தாக்குதல் ஒன்றிற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் இஸ்ரேலியப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலியப் படையினர் மேலும் தெரிவிக்கும்போது, தடைசெய்யப்பட்டுள்ள வலயத்திற்குள், 200 மீற்றர் தூரத்தில் அவர்கள் காணப்பட்டதாகவும், தடைசெய்யப்பட்டுள்ள வலயமான நகால்-ஒஷ் பிரதேசத்தில் தொடர்ந்தும் தேடுதல்களில் தாம் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தநேரத்தில், தீவிரவாதிகள் மாத்திரமன்றி, சாதாரண விவசாயிகளும், இஸ்ரேல் படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாவதாகவும் தெரியவருகின்றது.

இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்ட இருவருள் 25 வயதுடைய அல்இம் பெஸட் 'இஸ்லாமிக் ஜிகாட்'- எனப்படும் தீவிரவாத அமைப்பிற்கு ஆதரவுடைய குடும்பத்தின் அங்கத்தவர் என பலஸ்தீனிய வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சதாம் ஹுசைனின் சொந்தப் பிரதேசத்தில் நெருக்கடிக்குள்ளாகும் அமெரிக்கப்படை!

தொடரும் படை இழப்புக்களால்

ஈராக்கில் நேற்று இடம்பெற்ற இருவேறு இராணுவ வாகனக்குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதுடன், 40 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஐந்து அமெரிக்கப் படையினரும், நான்கு ஈராக்கியர்களும் அடங்குவர்.

சமறா பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தே இராணுவ 'ட்றக்' வண்டி மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவ வண்டி ஒன்றின் பின்னால் வந்த வாகனத்தில் இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவம் நடைபெற்ற பிரதேசத்திற்கு அருகில் அமைந்துள்ள நகரசபை கட்டிடத்துக்கு அருகில் தரித்து நின்ற வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

'சமரா' பிரதேசம் 'சனி' முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதியில் அமைந்துள்ளது. அண்மைக்காலமாக அமெரிக்கா இராணுவத்திற்கு எதிராகச் சதாமின் ஆதரவாளர்கள் மேற்கொண்டுவரும் தாக்குதல் சம்பவங்களில் அனேகமானவை இந்தப் பிரதேசத்திலேயே தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பதவியிலிருந்து அமாரிக்காவால் வெளியேற்றப்பட்ட சதாம் ஹுசெனின் சொந்தப் பிரதேசத்தில் ஈராக்கின் மீதான அமெரிக்கப் போரின் தாக்கத்தை அமெரிக்க படையினர் எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பி.பி.சி.யின் 'மைக் வூல்டியிட்ஸ்' தெரிவித்துள்ளார்.

தடை செய்யப்பட்ட அணு ஆயுதங்கள் ஈராக்கில் எப்போதும் இருக்கவில்லை!

அணு ஆயுத பரிசோதகர் தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் தடை செய்யப்பட்டுள்ள ஆயுதங்களைத் தேடும் பணிக்காக 'சாலிஷ் குயெல் மர்' என்பவர் அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையான ஆயுதங்கள் எங்கே காணப்படலாம் என்ற உண்மையைத் தெரிவிக்குமாறு அவரைக் கேட்டிருந்தபோது, பேராபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் ஈராக்கில் இருப்பதற்கான நம்பிக்கை தனக்கில்லையெனத் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஈராக்கில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்பதைக் காரணம் காட்டியே அதன் மீது போரை மேற்கொண்டிருந்தன. தற்போதும் அந்தவகையான ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றன.

இந்தவகையான ஆயுதங்களைத் தேடும் பணியில் கடமை புரிந்த "டேவிட்கே" தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் ஈராக்கில் இல்லை எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

தற்போது, ஈராக்கில் ஆயுதங்களைத் தேடும் பணியிலுள்ள 51 வயதான முன்னாள் ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர் இந்தப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னரே தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் ஈராக்கில் கிடையாது எனத் தெரிவித்திருந்தார்.

தற்போதும்கூட, அமெரிக்காவும், இங்கிலாந்தும் தமது முன்னைய கருத்தில் மாற்றங்களை உருவாக்கவுள்ளதாகவும், இதன் மூலம் போரழிவைத் தரக்கூடிய ஆயுதங்களுக்கான சாத்தியங்களைத் தேடுவதாகவும் தெரிவித்து வருகின்றன. ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டது முக்கியமானதொரு செயற்பாடெனவும், அவ்வாறு செய்யாது விடின், மேலும் பேரழிவைத் தரும் ஆயுதங்கள் தொடர்ந்தும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் என, அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையின் புலனாய்வுத்துறையின் அதிகாரியான ஜோன் ரொக் பெல்லர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போது, ஈராக்கில் ஆயுதங்கள் தொடர்பான தவறான புலனாய்வுத் தகவல்களை அமெரிக்கா பெற்றதன் மூலம், ஈராக்கில் அணு ஆயுதப் பரிசோதனைகள் செய்து வருகின்றனதெனவும், ஈராக்கிற்கும் அல்கொய்டாவிற்கும் தொடர்பு உண்டு



என தெரிவிக்கப்பட்டதாகவும், இதற்கான வெகுமதியை அமெரிக்கா தற்போது ஈராக்கில் பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

உலக நோக்கு

அமெரிக்கத் தொடரணி மீது பலுஜாவில் நேற்றும் தாக்குதல்

ஈராக்கின் பலுஜா நகரில் நேற்று அமெரிக்க இராணுவத் தொடரணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினரும், மூன்று ஈராக்கியர்களும் கொல்லப்பட்டனர்.

சமரா நகரில் கார்க்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், இடம்பெற்ற இந்தச் சம பவத்தில் தாக்குதலுக்குள்ளான அமெரிக்க இராணுவ அணியின் அதிரடிப்படைப் பிரிவைச் சேர்ந்தோரே இருந்ததாகத் தெரியவருகிறது.

வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த உள்ளூர்த் தயாரிப்பான குண்டு ஒன்றே வெடித்த தாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் ஈராக்கில் கடந்த மார்ச்மாதம் அமெரிக்கத் தாக்குதல்கள் தொடங்கிய பின்னர் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 509 ஆக அதிகரித்துள்ளது.

கோழியிலிருந்து மனிதனுக்குத் தாவும் ஆட்கொல்லி வைரஸ் நோய் ஆசியாவில்!

இதுவரை ஆறு பேர் மரணம்

(தாய்பேய்)

வியட்நாமில் பறவைகளைத் தாக்கி வரும் வைரசினால் மற்றுமொரு 13 வயதுச் சிறுவன 'சுர' நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள தாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே, இந்த வைரஸ் நோயின் தாக்கத்தினால் ஐந்து சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். கோழிக்குப் பரவி வருகின்ற இந்த வைரஸ் நோயின் தாக்கத்திற்கு மனிதர்கள் உட்படுவது அரிதாகவே இடம்பெறுகின்ற போதிலும், தற்போது கோழிப் பண்ணைகளின் அருகில் வசிப்பவர்களும் கூட இந்த நோய்த்தாக்கத்துக்கு உள்ளாவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைரசின் தாக்கம் தீவிரமடைந்து அதிகளவிலான மனிதர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, தாய்லாந்திலும் இந்த வைரஸ் லின் தாக்கம் கோழியிலிருந்து மனிதர்களுக்குப் பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் முக்கிய ஏற்றுமதியாளர்களான ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன தாய்லாந்திலிருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்வதினை ஏற்கனவே தடை செயதுள்ளன.

'கோழிச்சண்டை'ப் போட்டியில் ஈடுபடுத்துவதற்கு கோழிகளைப் பயிற்றுவித்துவரும் 56 வயதுடைய நபர் ஒருவரும் 'சுர' நோயினால் மரணமடைந்துள்ளார்.

உலகை வெல்லும் பயங்கரவாதம்

மக்கள் முன்னணி என்ற ஜே. வி. பி. க்கும், சந்திரிகா அம்மையாரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்டுள்ள உறவும், இணைப்பும், தொடர்பும் இதர கட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்படவிருப்பதாக சந்திரிகா அம்மையார் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

அம்மையாரின் இந்த ஆசையை ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியான அறிக்கையொன்று தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போய் இறங்கியபின், மூன்று முக்கிய அமைச்சுக்களின் பொறுப்பை சந்திரிகா அம்மையார் அதிரடியாக எடுத்தார்.

இந்த அதிரடி நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஆளும் கட்சியிலிருந்து சிலர் தமது பக்கம் வரக்கூடுமென்றும், இதன் மூலம் நாடாளுமன்றத்தில் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமென்றும், அவர் கற்பனை செய்திருக்கக்கூடும்.

ஜனநாயக முறையில் ஆட்சிமாற்றம் வரும் என்று அம்மையார் சிறிது காலமாகச் சொல்லிக்கொண்டிருந்தவர்.

அம்மையார் எதிர்பார்த்த கட்சித்தாவல் நடைபெறவில்லை. அமைதியான ஆட்சிமாற்றமும் நிகழவில்லை.

பின்னர், தேசிய நல்லிணக்க அரசு என்று சொல்லிப்பார்த்தார். ரணிலுடன் பேசினார். மதபீடாதிபதிகளுடனும் பேசி, நல்லிணக்க அரசுக்கு ரணிலின் இணக்கத்தைப் பெற முயன்றார். எதுவும் நடைபெறவில்லை.

ஜே. வி. பி. யுடன் நீண்டநாட்கள் பேசி முடிவில் ஒரு உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதைத்தொடர்ந்து ஏனைய கட்சிகளையும் சேர்த்து 'நல்லிணக்க அரசு' என்ற பெயரைத் 'தேசிய அரசு' ஆக்குவதற்கும் முயற்சி மேற்கொள்ளலாம் என்று கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை.

ஆனாலும், அவரது முயற்சிகள் தொடர்கின்றன. இதற்கு ஏற்றமுறையில் மக்கள் முன்னணியுடன் சுதந்திரக் கட்சி கூட்டுச் சேர்ந்திருப்பதால், சமாதான முயற்சிகள் பாதிக்கப்படுமென்ற சிலரின் குற்றச்சாட்டுக்களில் அர்த்தமில்லை என்றும், அவர் கூறியிருக்கிறார்.

தேர்தலில் மக்கள் ஆணையைப் பெற்று, எவர் ஆட்சிக்கு வந்தாலும், அவர்களுடன் பேசுவோம் என்று, தமிழ்ச்செல்வன் சொன்னதை கதிர்காமர் எடுத்துக்காட்டுவதைப் போல அம்மையாரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை, அவர்களது அபிலாஷைகளை அல்லது அவர்களது பிரச்சினைக்கான தீர்வை மறுதலித்துக்கொண்டும், அதற்குரிய தீர்வை எட்டவிரும்பாமலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே. வி. பி கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றால், அவர்களுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதென்பது கேள்விக்குரியதொரு விடமென அதே தமிழ்ச்செல்வன் தெரிவித்திருப்பது கதிர்காமரின் கண்ணுக்குத் தென்படவில்லை, அம்மையாரின் காதுக்கும் போகவில்லைப்போலும்.

இதே சமயம் 'புலிகள் நல்ல பிள்ளைகள்' என்றும் அம்மையார் நற்சான்று வழங்கியிருக்கிறார்.

முக்கிய அமைச்சர்கள் வன்னிக்குப் போய் ஏ-9 பாதையை மூடும்படியும், மீண்டும் போரைத் தொடங்கும்படியும் கேட்டும்கூட, விடுதலைப் புலிகள் அமைதியைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள். அவர்கள் மிக நல்ல பிள்ளைகள் என்று அம்மையார் சொல்லியிருக்கிறார்.

தலைவர் பிரபாகரனை இந்திய விடுதலைப் போராட்ட வீரன் பகத்சிங்குடன் முன்பு ஒப்பிட்டுப்பேசிய இதே சந்திரிகாதான் 'படு பயங்கரவாதி' என்றும் பின்னர் பேசியவர்.

தமது காரியமாவதற்கு அம்மையார் எப்படியும் பேசுவார்.

அது இருக்கட்டும் நமது ஆனந்த சங்கரியார் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் பிரதமருடன் சேர்ந்து செயல்பட்டால், பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்று யோசனை கூறியிருக்கிறார்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பது உண்மைதான்! அது கூட்டணிக்கும் பொருந்தும். கூட்டணியின் பெரும்பானமை உறுப்பினர்களுடன் ஒன்றுபட்டுச் சங்கரியார் வழிகாட்டலாமே!

நல்லூர் கலை இலக்கிய
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

'புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டணியின் தலைவர் சந்திரிகாவா? சோமவன்சவா'?

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி கூட்டுச்சேர்ந்துள்ளதா? ஜே.வி.பி பின்னால் சுதந்திரக்கட்சி போய் ஒட்டியுள்ளதா? '

'கூட்டணின் பேச்சாளர் விமல் வீரவன்சவா? லக்ஷ்மன் கதிர்காமரா? '

'என்ன மணியம் கேள்வி மேல் கேள்வியா அடுக்கிக் கொண்டு போறாய்-? '

'இல்லைக் கனகண்ணை எல்லாம் ஒரேகுழப்பமாய் இருக்கு... அது தான் கூட்டணி சரியா செயற்படவே தொடங்கேல்லை...ஏதோ ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமெல்லாம் தங்கடை கைக்குள் வந்து விட்டதாக ஜே.வி.பி காரர் கொக்கரிக்கினம்...'

'அதுதான்... கூடக்கூடாத கூட்டத்தோட கூட்டுச்சேர்ந்தால் ஆடக்கூடாத ஆட்டமெல்லாம் ஆடி... கேட்கக்கூடாத பேரை எல்லாம் கேட்கத்தான் வேண்டும்.'

'அதிலை இந்தக் கூட்டணி குறித்து தமிழர்கள் பயப்படத் தேவையில்லை என்றெல்லே கதிர்காமர் கூறியுள்ளார்...தமிழர்கள் பயந்ததென்று உவருக்கு யாராம் சொன்னவை? '

'அவற்றை புலம்பலை விடு... மாரித்தவக்கை மாதிரி கடமுடா என்று ஏதாவது கத்திக்கொண்டுதான் இருப்பார்.'

'புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக தங்களின் நிலைப்பாடு மாறாது என்று மெல்லே அவர் கூறியிருக்கிறார்.'

'அவர் ஒன்று சொன்னா அம்மையார் இன்னொன்று சொல்லி சமாளிப்பது தான் வழக்கம்... ஆனால், இப்ப வேறொன்றை சொல்லி இரண்டுபேரையும் குழப்ப ஜே.வி.பியும்..அதுதான் சோமவன்சவும் வந்திருக்கிறார்... பிறகென்ன... குழப்பத்திற்கு குறைவேது...? '

'அப்ப இனி அரசியல் குழப்பம்தான் இருக்கும் என்கிறாயோ?

'இல்லை இல்லை...குழப்பம் தான் அரசியலாக இருக்கப்போகுது பாரன்...'

தெருவரசி

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைந்த மாணவர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை முன்னணியில் உள்ளது.

யாழ். மாவட்டத்தில் அதிகூடிய புள்ளியான 172 ஐ சென். ஜோன் பொஸ்கோ பாடசாலை மாணவன் பி.விதூஜன் பெற்றுள்ளார்.

யாழ்.குடாநாட்டு பாடசாலைகள் சிலவற்றில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர விபரங்கள் வருமாறு.

யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையில் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்.

பி. ஜதுர்சனன்-171, யு.மேனாளன்-155, எஸ்.கமலாட்சகன்-152, எல். கஜலக்சன்-156, ஏ.பிரியந்தினி-153, எஸ். துசானி-158, வி.நாராயணி-161, பி.சாருகா-154, ரி.சுஜீவன்-160, எஸ். ரகுராம்-154, ஏ.ரோய்பானுசந்தர்-164, ஜீ.கணபாலன்-152, வி.சுஜீவன்-150, ஆர்.வித்தகன்-158, வி.கிருசாந்-153, எஸ்.சுபாங்கன்-154.

இந்தப் பாடசாலையில் 46 சத வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளின் பெயர் விபரம் வருமாறு.

பி.ஆரண்யா-156, எம்.நீதினி-154, பி.பானுஜா-153, ஏ.சாம்பவி-152, எஸ். கீர்த்தனா-151, எல். பத்தஜனனி-150, கே.பன்சுகா-146, டி.ரஜிந்தா ஜெயம் வலன்சியா-144, கே.கீர்த்தனா-143, பி.சங்கீதா-143, எஸ்.பவதாரணி-139, என்.நிருசா-139, ஜே.கம்சாந்தி-137, ஆர்.கோபிகா-136, எம்.பானுப்பிரியா-135, எஸ்.சித்திராங்கி-133, எஸ்.சோபிதா-133, பி.பிரவீனா-133, எஸ். லக்ஸ்சனா-132, கே.காவேரி-131, ஏ.விரோஜா-130, எஸ்.நிசாந்திகா-128, எஸ். சுகன்ஜா-126, பி.சுமிதா-126, ஜே.விவேகா-125, வை.துசாயினி-124, வி. தேனுஜா-122, பி.மயூரி-120, எஸ்.தர்மிக்கா-119, பி.கேசாயினி-119, வி. லக்ஸ்மி-118, ஆர்.சாஜினி-118, எஸ். சுபானி-118, வை.மயூரா-118.

102 பேர் பரீட்சைக்குத் தோற்றி 34 பேர் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலையில் சித்தியடைந்தோர்.

பி.கஜலக்சன்-165, எம்.விதுர்சா - 157, எஸ்.அர்ஜுன்-155, வி.பிரசாந்தன்-156, அ.விமோசனன்-151, பா.ரனுஜன்-137, பா.பாலினி-121, க.சனாதனி-124, செ.சுஜீவா147, பு.திவ்யா-120, ஜெ.திவ்யா-122, ச.ஜெயகணேஷ்-136, வி.கோகுலன்-136, கு.பதீதன்-118, யோ.ஆதித்தன்-121, செ.கிருஷாந்- 136, வி.கிஷோபன்-131, சி.கீரன்-137, கு.லோகசுதன்-120, க.பராபரன்-124, சி.பிரியவருன்-138, த.தேவதயாராஜ்-135, இ.தர்ஷன்-137, ப.கோபினி-119, பி. செந்தாளன்-142, சி.சிவலக்ஷன்-127, கே.ஜதீஷன்-121, இ.ஹம்சாயினி-125, பே.பபிதா-120, ச.சர்மி-134, ச.சஞ்சிதா-119, ரு.சஹானா-125, ம.துவாரகா-138, இ.துஷானி-118, இ. ஜசிந்தா-127, ரி.தர்மினி-121, வி. மதுஷா-121,

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில்...

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் சமூகச் சீர்கேடுகள், தீயசக்திகளின் திட்டமிட்ட கொலைகள் தொடர்பாக மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். இதுகுறித்து தமது உணர்வலைகளை அவர்கள் எம்மிடமும் பகிர்நது கொண்டுள்ளனர். ஆதலால், இவ்வாறான தீயசக்திகளின் கொடூரமான செயல்களை யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஆழமாக ஆராய்ந்து வருகிறது.

பொலிஸார் இவ்வாறான கொலைகள் தொடர்பாக போதிய நடவடிக்கை எடுத்துள்ளார்களா? குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனரா? கொலைகள் தொடர்வதன் பின்னணி என்ன? இவ்வாறான கொலைகளைத்தடுக்க பொலிஸாரால் முடியவில்லையா? என்பன குறித்து பொலிஸார் மீது மக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வாறான கொலைகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான கொலைகளோ, குற்றச்செயல்களோ அல்லது சமூகச் சீர்கேடுகளோ நடப்பதனைக் காணமுடியாது. அவ்வாறு எங்காவது ஓர் மூலையில் எப்போதாவது ஒரு நாள் நடைபெற்றாலும், குற்றவாளிகளை தமிழீழ காவல்துறை கண்டுபிடித்து விடுகிறது. அவர்களது கடமையுணர்வை அனைவரும் பாராட்டுகின்றனர். ஆனால் யாழ். குடாநாட்டில் நிலை பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது. சாவகச்சேரி கனகம்புளியடிப் பகுதியில் ஒரு குடும்பம் பூண்டோடு அழிக்கப்பட்டுள்ளது. கணவன், மனைவி, மகன் ஆகியோர் இரவோடு இரவாக வெட்டிச்சாய்க்கப்பட்டுள்ளனர். அவர்களது உறவினர் தவிப்புக்கு யார் பதில் கூறுவது? அநியாயமான கொலைகளை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ்மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு - பாதுகாப்பிற்கு பொலிஸாரால் உத்தரவாதம் இல்லை. இது தொடர்பாக எமது முயற்சிகள் தொடரும். தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து தீய சக்திகளின் செயலை முறியடிக்க வேண்டும் என யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இந்த அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினிபஸ்...

விபத்தின்போது, ம.கிறிஸ்தோப்மன் (வயது 12) என்ற மாணவன் சம பவ இடத்திலேயே பலியானார். ஜோர்ஜ கிலறன் அனோசியஸ் (வயது 12) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார்.

மின் கம்பத்துடன் மினிபஸ் மோதியதால் மின் கம்பிகள் அறுந்துள்ளன. இதனால், மின் தாக்கத்துக்கு மாணவன் உட்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மினி பஸ்ஸை பறிமுதல் செய்ததுடன், உயிழந்த மாணவனது சடலத்தை சங்கானை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலம் வைத்திய பரிசோதனைக்காக சங்கானை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை...

பொலிஸாரினால் மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட வேளை நான்கு பேரையும் அடுத்த மாதம் ஆறாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தொடர்ந்து...

இதேவேளை, ஜனாபதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள விடயங்கள் குறித்து அடுத்தவாரம் வெளியிடுவதற்கு இக்குழுவினர் இணங்கியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேச்சுவார்த்தையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஜனாபதிபதியின் சார்பாக அவரது செயலாளரும், சிரேஷ்ட ஆலோசகருமான மனோதித்தவெல, பிரதமரின் சார்பாக அவரது செயலாளரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருமான மலிக் சமரவிக்கிரம ஆகியோர் கலந்துகொண்டனர்.

லஞ்ச ஆணைக்குழு செயற்படுவதற்கு ஜனாதிபதி தான் தடையில்லையாம்!

ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

ஜனாதிபதியின் தவறால் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையவில்லை என ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூவரைக் கொண்ட லஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் ஸ்தம்பிதமடைந்தன.

இந்த வெற்றிடத்துக்கு புதிதாக ஒருவரைத தெரிவு செய்வதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவைக்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெற்றிடதை நிரப்பும் செயலை அவசர தேவையாகக் கருதி அமைச்சரவைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் ஸ்தம்பித நிலைகுறித்து விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதி, பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் அரசியல் யாப்பு அமைக்கும் விடயத்தில் அவசரப்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகத்தின் அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம்....

வவுனியா தமிழ் வித்தியாலயத்தின் எஸ். பவித்திரன் 173 புள்ளிகள் பெற்று ஐந்தாம் இடத்திலும் உள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

ஜே.வி.பியுடன்...

செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டு வருடங்களாக இடம் பெற்ற சீர்ற்ற நிர்வாகத்தால் நாட்டின் பொருளாதாரமும், கலாசாரமும் சீரழிவுக்கு உள்ளாகியிருக்கின்றன.

இந்த மோசமான நிர்வாகத்தால் நாடு பிளவுபடக்கூடிய அபாயநிலை தோன்றியிருப்பதாகவும் சுதந்திரக் கட்சியின் ஊடகப்பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி வான்....

அவசர சிகிச்சைப் பிரிவில் அரை மணிநேரமாக சிகிச்சையளிக்கப்பட்டபோது அது பலனளிக்காமல் யுவதி உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

eTouch COMPUTER SYSTEM
The right way to touch IT
Uduvil Road, Maruthanarmadam, Jaffna.
T.P:- 0214 - 590222 E-mail:- etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலைநேர (4.00p.m to 7.00p.m) வகுப்புக்கள் ஆரம்பம்

Diploma in Ms Office
Diploma in Computer programming
Diploma in Desktop Publishing
Diploma in Multimedia
Diploma in Hardware

காலம் 3 மாதங்கள்

✸ புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனி பற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் Diploma in pc Handling (Online class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்!!

✸ GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலைநேர (3.30 to 4.30) கற்கைநெறி -Diploma in information technology

✸ இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Srilanka Computer driving Licence - SLCDL) வகுப்புகள்

இப்பொழுது அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

Director
Uduvil Road,
Maruthanarmadam,
Jaffna.
T.P:- 0214 - 590222
E-mail:- etouch@wow.lk

(602)

மரண அறிவித்தல்

சின்னையா கனகசபை (நீகல்)
(உரிமையாளர் நீகல் சவுண்ட்ஸ் & வீடியோ)

ஈச்சமோட்டை கடற்கரை வீதியைச் சேர்ந்த "நீகல்" என அன்பாக அழைக்கப்படும் சின்னையா கனகசபை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (26.01.2004) காலை ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக, துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/7, ஈச்சமோட்டை
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 - 222 2896

(604)

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.